மாலை: 51 மணி: 9 செப்டம்பர் 2009 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு



ஸ்மார்ட் கிரியேஷன்ஸ்


பொன் ஆலயம்

**பக்தியுடன் சமர்ப்பணம் செய்த 8.02.2009 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்ற கும்பகோணம் அருள்மிகு ஸ்ரீ ஒப்பிலியப்பர் திருக்கோயில் மூலவர் தங்க விமான பத்மம் மற்றும் மஹா பத்மம்**

**அதிநவீனம், அற்புதம், உன்னத NTGD லண்டன் தொழில்நுட்பம்!**

தொடர்புக்கு :
K.S.S. நாராயணன்
98848 77722

- சிக்கனமான முறை
- நீடித்து நிலைக்கும் பொலிவு
- தமிழக அறநிலையத்துறையின் அங்கீகாரம்
- தங்கத்தின் அளவை துல்லியமாக கணக்கிடலாம்



தங்கத்தேர், கொடிமரம், கலசங்கள், விமானம், கவசங்கள், பிரபை, மூலஸ்தான கதவுகள்

பித்தளை, தாமிரம், வெள்ளி மற்றும் பஞ்சலோகத்தில் 24கேரட் கோல்ட் கோட்டிங் சிறப்பாக செய்து தர இயலும்

SP 15, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 600 058. Tel : 044 2623 0033 /4205 9911

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2040 புரட்டாசி மாதம்
மாலை 51. மணி 9 செப்டம்பர் 2009

**அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!**

**வணக்கம்.**

மும்மூர்த்திகள், நான்கு வேதங்கள், அறுவகை சமயங்கள், பதினான்கு உலகங்கள், 27 நட்சத்திரங்கள் என வகுத்த நம் முன்னோர்கள் கலைகள் 64 என வகைப்படுத்தியுள்ளனர். இக்கலைகளுக்கெல்லாம் அதிதேவதையாக விளங்கும் கலைமகளைப் போற்றிக்கொண்டாடும் விழா நவராத்திரி விழா.

இதனைச் சிறப்பித்திடும் வகையில் அருள்மிகு மகாலட்சுமி, சீதாலட்சுமி அலங்காரத்தில் முன் முகப்பிலும் கலைமகளின் மீது அருட்கவி பாடிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 'சகலகலா வல்லி' பாமாலை கலைமகளின் அழகிய வண்ணப்படத்துடன் உள் முகப்பாகவும் கொண்டு இவ்விதழ் மலர்ந்துள்ளது.

உழைப்பு ஒன்றே அறம் பொருள் நிறைந்த இன்ப வாழ்விற்குரியது என்றும், நம் கருத்தில் எழும் தீய எண்ணங்களை அகற்றி தூய மொழியும், தூய செயலும், மேம்பட கலைகளை இயக்கிடும் அருட் சக்தியான கலைமகளையும், செல்வத்தை ஈட்டக்கூடிய அருட்சக்தியான திருமகளையும், வீரத்தை விளைவிக்கும் அருட்சக்தியான மலைமகளையும் வழிபடும் விழா கலைவிழா நவராத்திரிப் பெருவிழா என சிந்தித்தலுக்குரிய சிறப்பானதொரு கருத்துக்குவியலை வழங்கியுள்ளார் டாக்டர் திருமதி. ராதாதியாகராஜன் அவர்கள்.

நல்லதை நினைத்து, நினைத்ததைச் சொல்லி, சொல்லியதை செயல்படுத்தும் திரிகரணசுத்தி நிலைபெற்று எம்பெருமான் பாசுரங்களைப் பாடுவதே இடையூறின்றி திருநாடு அடைவதற்கான எளிய வழி எனப்பகர்ந்துள்ளார் "திருவரங்கனும் சேரலர்கோனும்" எனும் கட்டுரையில் முனைவர் ஏ. பரந்தாம ராமானுஜதாசர்.

திருக்கோயில்களின் வளர்ச்சி நிலையையும், இறைவனைப் போற்றிப் பரவும் திருமுறைகளையும் அவற்றைப்பாடும் பணியினைச்செய்யும் ஓதுவார்கள் குறித்தும் திருக்கோயில்களும் திருமுறைகளும் எனும் தலைப்பில் தொகுத்து வழங்கியுள்ளார் திரு. அழ. முத்துப்பழனியப்பன் அவர்கள்.

நந்தனாருக்காக நந்தியை விலகச்செய்து காட்சிகொடுத்த அருள்மிகு சிவலோகநாதர் வீற்றிருந்து அருள்பாலிக்கும் திருப்புன்கூர் திருத்தலச் சிறப்புகளும், சரித்திரத்தில் இடம்பெற்ற வேலூர் கோட்டையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில் பெருமைகளையும், அஷ்டலட்சுமிகளும் வீற்றிருந்து மங்கலங்கள் வழங்கிடும் பெசன்ட் நகர் அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயிலின் சிறப்புகளும் இவ்விதழில் திருத்தல உலாக்களாக வெளிவந்துள்ளன.

"சாவித்திரி"யின் தனிப்பெரும் சிறப்பை விளக்கிடும் "சாவித்திரி" எனும் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் தொடரும் பெ. ராமநாதபிள்ளையின் "உலகம் உய்ய உதித்தவர்" எனும் தொடரும் வெளிவந்துள்ளது.

அறிவுப்பசியை நீக்கும் கல்விக்கு மட்டுமன்றி உழவுத்தொழில், நெசவுத்தொழில், ஆயுதங்கள் செய்யும் தொழில் அனைத்திற்குமே அவள் அருள் தேவை.

உலகியல் வாழ்வில் அனைத்தும் சிறக்க அருள்வழங்கும் முப்பெரும் தேவியரையும் இந் நவராத்திரி விழாவில் போற்றி வழிபட்டு நற்பயன்கள் பெறுவோமாக.

**வாழ்க வளமுடன்**

ப.ரா. சம்பத்

**இந்துசமய அறநிலையத்துறை**
**119. உத்தமர் காந்தி சாலை,**
**சென்னை – 600 034.**

**(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.)**
ஆணையர்



தம் ஆட்சிச் சின்னங்களான புலி, வில், கயல் ஆகியவற்றை மலைகளில் பொறித்துச் சென்றனர் என்ற பழைய செய்திகளைக் கூறினர். அப்போது வெகுண்டெழுந்த கனக விஜயர் இருவரும் தமிழ் மன்னர்களின் வீரத்தை இகழ்ந்துரைத்தனர்.

"சேரனோ, சோழனோ, பாண்டியனோ இமயம் வரையில் சேனையுடன் வந்து செம்மாந்து திரும்பியபோது எம்மைப் போன்ற மன்னர்கள் இங்கே இல்லை போலும். இருந்திருந்தால் அவர்கள் புறமுதுகிட்டு ஓடியிருப்பர்,'' எனப் பழித்துப் பேசினர்!

# குறளோவியம்

**சி**லம்புச் செல்வத்தைத் தமிழ் உலகிற்கு வழங்கிய இளங்கோவடிகளாரின் அண்ணன் சேரன் செங்குட்டுவன் வீரங்கொழிக்கத் தாயகத்தை ஆண்டு கொண்டிருந்த காலம்! அப்போது வடபுலத்து மன்னர்களில் புகழ் மிக்கவர்களின் வரிசையில் கனகன் விஜயன் என இருவர் இருந்தனர். அடக்கமில்லாத நா படைத்தவர்கள் அவர்கள். எவரையும், எளிதில் கேலி பேசக்கூடிய இயல்பினர். ஒருநாள் விருந்தொன்றில் கலந்து கொண்டு மது வெறியில் தள்ளாடினர். அப்போதும் அவர்களின் மமதை வெளிப்படத் தவறவில்லை. விருந்தில் கலந்து கொண்ட மன்னர்கள் சிலர் தமிழகத்து மூவேந்தர்கள் இமயம் வரையில் படையெடுத்து வந்து அவர்


இந்தச் செய்தி செங்குட்டுவனின் செவிக்கு எட்டியது! "தமிழ் மன்னர்களைப் பழித்த தருக்கர்களை என் தாள் பணிய வைக்காமல் விடேன்!" எனச் சூளுரைத்துப் போர் முரசு கொட்டினான். வடபுலம் நோக்கி, அவன் படை புறப்பட்டது. அமைச்சர் அழும்பில் வேள் அருகிருக்க, வில்லவன் கோதை படை நடத்த, செங்குட்டுவன், தனது துணைவி வேண்மாளிடம் விடை பெற்று வீர வாளேந்திக் கிளம்பி விட்டான்.

வழியில் பல மன்னர்கள் அவனை வரவேற்றுப் பணிந்தனர். சில மன்னர்கள் அவனுக்குத் துணையாகப் படைகளையும் அனுப்பினர். வடக்கே, குயிலாலுவம் என்ற இடத்தில் கனக விஜயர்களுடன் செங்குட்டுவன் மோதினான். இறுதி வெற்றி

சேரன் செங்குட்டுவனுக்குத்தான்! கனக விஜயர்களைக் காணவில்லை. கடைசியாக அவர்களைத் துறவிகள் வேடத்தில் கண்டுபிடித்து செங்குட்டுவன் எதிரே கொண்டு வந்து நிறுத்தினர்.

''கற்பரசி கண்ணகிக்குச் சிலை வடிக்க இமயத்திலே கல் எடுத்து; அதனை இந்த எருதுகளைச் சுமந்துவரச் செய்க!'' என ஆணையிட்டான் செங்குட்டுவன்! அவ்வாறே கனகவிஜயர் தலையில் கல் ஏற்றப்பட்டது! அதனைத் தூக்கிக் கொண்டு கால்கடுக்க நடந்தனர் அந்த வாயடக்கமற்ற பிறவிகள்!

அப்போது அமைச்சர் அழும்பில்வேள் சொன்னார்.



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

"நல்லதும் கெட்டதும் ஒருவன் சொல்கின்ற சொல்லால் வருவதால், சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ள வேண்டும்," என்று!

அதைத் தான் இந்தக் குறள் விளக்குகிறது.

**"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்**
**காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு."**

**அதிகாரம்–65. சொல்வன்மை பாடல்: 642.**

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.**

## இதழின் உள்ளே..


| | | |
|---|---|---|
| கலைமகளும், கலைவிழாவும் | டாக்டர்திருமதி ராதா தியாகராசன் | 6 |
| திருவரங்கனும் சேரலர் கோனும் | முனைவர்.ஏ.பரந்தாமராமானுஜதாசர் | 10 |
| திருக்கோயில்களும், திருமுறைகளும் | அழ. முத்துப் பழனியப்பன் | 13 |
| நம்பியாண்டார் நம்பி | | 16 |
| வேலூர் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில் | பனையபுரம் திரு. அதியமான் | 18 |
| அருள்மிகு சிவலோகநாதர்– திருப்புன்கூர் | | 23 |
| உலகம் உய்ய உதித்த உடையவர் | பெ. ராமநாதபிள்ளை, | 27 |
| சாவித்திரி | திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் | 31 |
| கங்காதரர் | பூசை. ச. அருணவசந்தன் | 35 |
| அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில் – பெசன்ட் நகர் | | 37 |



# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய சகலகலாவல்லி மாலை

வெண் தாமரைக்கு அன்றி நின் பதம் தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய் தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய் பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள் அமுதுதார்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும் கொலொ உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியும் சொற் சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்பாதம் பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராது என்னே நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத்தவி சொத்திருந்தாய் சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளிது எய்த நல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

சொல்விற் பனமும் அவதான முங்கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக்கு அரிது என்றொரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெரும் செல்வப் பேறே சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிரா மெய்ஞ் ஞானத்தின் ஒற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பிலும் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே.


# "கலைமகளும் கலை விழாவும்"

கலைகள் அறுபத்து நான்கு; அவற்றை நல்குபவள் கலைமகள் என்பது நம் நாட்டில் தொன்று தொண்டு நிலவி வரும் கருத்து.

**"ஆய கலைகள் அறுபத்து**
**நான்கினையும்**
**ஏய உணர்விக்கும் என் அம்மை –**
**தூய**
**உருப்பளிங்கு போல்வாள்; என்**
**உள்ளத்தின் உள்ளே**
**இருப்பள்; இங்கு வாராது இடர்."**

என்று கூறுவர் கம்பர்.

கலையாவது கற்கப்படும் யாவற்றுக்கும் உரிய பெயராகும். இனி, சிவஞானபாடியம் செய்த சிவஞான முனிவர், கலையென்பது உயிரை, அறிவு விழைவு செயல் என்ற மூவகை யாற்றலுள், செயலாற்றலில் செலுத்துவது என்றும், அது கலித்தல் என்ற சொல்லடியாகத் தோன்றுவது என்றும் விளங்க வுரைக்கின்றார். எனவே, செயல்வகைப்பட்டுச் செயப்படுபொருளின் கண் எழிலும் ஒளியும் கவர்ச்சியும் பொலியச் செய்வது கலை என்பது தோன்றும். முனிவர் பெருமான் மொழிந்த கருத்தே இன்றைய உலக வழக்கிற்கு ஒத்திருக்கிறது. எதைச் செய்யினும், உயரிய ஒழுங்கும் திறமையும் செப்பமும் விளங்கச் செய்வதைக் 'கலைத்திறம்' என்று இந்நாளில் கருதுகின்றனர்.




கல்வித் துறையினர், மக்கட்பண்புக்குரிய உணர்வும் ஒழுக்கமும் பயக்கும் துறையைக் கலை யென்றும், தொழிற்குரிய அறிவும் செயற்பாடும் நல்கும் துறையை விஞ்ஞானம் தொழில் என்றும் பகுத்துள்ளனர். தொழிலும் அதற்குரிய கருவிகளும் ஆயவற்றைச் செய்வதிலும் கலைத் திறம் இன்றியமையாதிருத்தலால், கலையென்பது அறிவு, செயல் ஆகிய எல்லாவற்றிலும் கலந்து இயலுவது ஆகும். உள்ளத்தில் எழும் உணர்வுகளை வெளிப்படுத்தும் சொல்லிலும்

---

**–டாக்டர் திருமதி. ராதா தியாகராஜன்** எம்.ஏ.பி.எச்டி.,

செயலிலும் கலந்து நிற்பது கலைக்கு இயல்பு என்று தெரிகின்றோம்.

இக்கலை, இறைவன் படைப்புகள் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பது பற்றியே இறைவனைக் "கலையுருவினன்" என்று மணிமேகலையில் வரும் சைவவாதி யுரைக்கின்றான். திருஞானசம்பந்தர்.

**"கலையவன் மறையவன் காற்றொடு தீ**

**மலையவன் மண்ணொடு**

**விண்ணுமவன்"**

என்று கூறுகின்றார். கற்றற்குரிய மறையைப் பிரித்துக் கூறுவதால், கலையென்றது மேலே கூறிய பொருளில் நிற்பதை இனிது தெளியலாம். அறிவுப் பேற்றுக்குரிய கல்வியும், செயற்பாட்டுக்குரிய கலைத் திறமும் ஒருங்கு பெற்றவரைக் குமரகுருபரர், **"கலைப்பால் நிறைந்த முதுக்குறைவின் கல்விச் செல்வர்"** என்று சிறப்பிப்பதும் இங்கே நினைவுகூரத்தக்கது.

இங்ஙனம், செய்பொருள் அனைத்திலும் தோய்ந்து ஒளி செய்வது பற்றிக் கலையைத் தெய்வச் சார்புடையதாக நம் பெரியோர் கருதியது பொருத்தமே. கலை முதலிய தத்துவங்களை இயக்குவது அருட்சக்தி. அதுபற்றியே,

**"காலத்தொடு கற்பனை கடந்த**

**கருவூலத்துப் பழம்பாடல்**

**கலைமாச் செல்வர் தேடிவைத்த**

**கடவுள் மணியே"**

என்று குமரகுருபரர் மீனாட்சியைக் குறித்துப் பாடுகிறார். கலையை இயக்கும் அருட்சத்தியே கலைமகளாகக் கொள்ளப்படுகிறது. செல்வத்தை ஈட்டற்குரிய ஆற்றலை இயக்கும் அருட்சத்தி திருமகள். வீரம் விளைவிக்கும் அருட்சத்தி மலைமகளாகிய பார்வதி என்பர். எனவே, சத்தி வழிபாடே கலைமகள் விழா ஆகும்.

மேலும், கலை என்பது செயலிலும், செயலால் விளையும் பொருளிலும் விளங்கும் என்பதைச் சிவஞான முனிவர் கூறுவதால், கலை விழா, நாம் செய்யும் தொழில் பற்றி நிகழும் விழா என்று தெரிகின்றோம்.

தொழில், உழவுத் தொழில், கைத்தொழில் எனப் பலவாகும். உழவு என்றவுடன் யாவரும் பொதுவாக உண்பொருளை விளைவிக்கும் தொழில் என்று கருதுகின்றனர். மெய்வருந்திப் பாடுபடுவதை உழத்தல் என்பர். "உழந்தும் உழவே தலை'' என்று திருவள்ளுவர் கூறுவதால், உழத்தலும் உழவே என்று



விளங்கும். இவ்வாறு உழத்தலை உழைப்பு என்றும் வழங்குகின்றனர். இங்ஙனம், உழவு, உழத்தல், உழப்பு, உழைப்பு என வரும் சொற்கள் யாவும் மெய்வருந்தப் பாடுபடும் செயலைக் குறிப்பதை நினைவிற் கொண்டால் மனத்தால் சிந்தித்தலும், வாயாற் பேசுதலும், உடம்பு வருந்தச் செயல்புரிவதும் உழவு என்பதற்குப் பொருந்துவதாகும்.

இதுபற்றியே மனம் கருவியாகச் சிந்திக்கும் தொழிலாளராகிய புலமைச் செல்வரைப் "புலனாவுழவர்" என்றும், வாய் கருவியாகச் சொல்லால் பேசியும் எழுதியும் வாழ்பவரைச் "சொல்லேருழவர்"

என்றும், வில்லேந்திப் போர் புரியும் மக்களை ''வில்லேருழவர்'' என்றும் சான்றோர் குறிக்கின்றனர்.

இவ்வகையில், அறிவையும் மனத்தையும் செலுத்தி எந்திரங்களிடையே நின்று இயக்கும் ஆலைத் தொழிலாளி ஆலையுழவனாகவும், கை கருவியாகப் பல்வேறு பொருள்களைப் படைக்கும் தொழிலாளி கைத்தொழில் உழவனாகவும் விளங்குகின்றனர்.

**"இரவார் இரப்பார்க்கு ஒன்றீவார் இரவாது**

**கை செய்தூண் மாலையவர்"**

**(1035)**

என்ற திருக்குறள், உழுதுண்ணும் உழவர்க்கேயன்றிக் கைத் தொழிலாளர்க்கும் பொருந்த அமைந்திருப்பது காணலாம். ஆகவே, ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று திருவள்ளுவர் திட்ட மாகக் கூறியது வயலை உழுகின்றவன்தான் உழவன் என்பது கருத்தன்று; வேளாண்மை புரியும் தொழிலாளியுடன், ஆலைகளிலும் எந்திரச்சாலைகளிலும் பணிபுரியும் தொழிலாளர்களையும் இணைத்துக் கூறியுள்ளார் என்றே கருதலாம்.

தொழிலாளர்களையும் "கை செய்தூண் மாலையவர்" என்ற சொற்டொரில் அடக்கி உழவராக்கி, உழுதுண்டு அதாவது உழைத்து உண்டு வாழ்பவரே வாழ்பவர் எனப்படுவர் என்று சிறப்பிப்பது இக்குறட்தொடரின் உண்மைக் கருத்தாகும்.

உழவும், உழப்பும், உழைப்பும் இன்றிப் பிறரைக் கைதொழுது அவர் தருவதைப் பெற்று உயிர் வாழ்பவரை 'தொழுதுண்டு பின் செல்பவர்'' என்று திருக்குறள் பழித்துரைக்கின்றது.

அன்றியும், தொழில் செய்வதை உழப்பு என்றும், செய்யாமையைக் கழப்பு என்றும் கொண்ட பட்டினத்தடிகள், அறம் பொருள் இன்பம் வீடு என்ற உறுதிப்பொருள் உழப்பினாலன்றி – உழைத்தாலன்றிக் – கைகூடா என்ற கருத்துப்பட,

**"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ**

**கழப்பின் வாராக் கையறுவு உளவோ"**

என்று கூறுகின்றார். இதனால், உழைப்பு ஒன்றே அறமும் பொருளும் நிறைந்த இன்ப வாழ்வுக்கு உரியது; அவ்வுழைப்பு இல்லையாயின், சோம்பல் துன்பமே என்பதற்காகவே அவர்,

**"கழப்பின் வாராக் கையறவு உளவோ" என்று சேர்த்து உரைக்கின்றார்.**

இவ்வண்ணம், வள்ளுவரும் பட்டினத்தாரும் போன்ற உயர்ந்தோர் பாராட்டும் தொழிலின் சிறப்பையும், அதனைச் செம்மையாகச் செய்யும் தொழிலாளர்க்கமைந்த கருவிகளையும் பொறிகளையும் போற்றி, அவற்றிற்கு வழிபாடு செய்யும் முறையில் இந்நாளை நன்னாளாக நம் முன்னோர் வகுத்துள்ளனர்.

இங்ஙனம், கலைஞர்களாகிய தொழிலாளர்களையும், அவருடைய கருவிகளையும் சிறப்பித்த பெரியோர், கலைத்திறம் விளங்குவதற்கு இடமாகவுள்ள – அவர்களால் படைக்கப்பட்ட – கைப்பொருள்களைத் தொகுத்துக் கலை நலம் சிறக்கக் காட்சிப்பட வைத்து வழிபடுவது இக்கலை விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாகக் கருதுகின்றனர். சிற்பத் தொழில் நல்கும் சிறந்த சிற்பங்களையும், ஓவியம் தரும் ஓவியங்களையும் கலைக்காட்சியில் நிறுத்தி விழாக் கொண்டாடும் பழக்கத்தை உண்டு பண்ணியுள்ளனர். சில குடும்பங்களில் தங்கள் முன்னோர் கையேந்தி வீரம் விளைத்துப் புகழ் கொண்ட வேல், வாள் முதலிய படைக்கலன்களையும், எழுதிப் புகழ் பெற்ற நூல்களையும், எழுது கருவிகளையும் வைத்துக் கலை வணக்கம் செய்கின்றனர். வீடுகளில் சிறுவர்கள் விளையாடும் பொம்மைகளையும் விளையாட்டுப் பொருள்களையும் அழகுற அடுக்கிக் கலைநலம் பாராட்டுகின்றனர்.

இவ்வாறு தொழில் வளத்தையும் கலைத் திறத்தையும் போற்றுதற்கென அமைந்த

இவ்விழாவைத் தெய்வத் தொடர்புடைய தாக்கினால் தான் மக்கள் விரும்பி ஆர்வத்துடனும், பக்தியுடனும் செய்வார்கள், என்ற கருத்தை நினைவிற்கொண்டே புராண வரலாறு ஒன்றை இதனோடு இணைத்து நவராத்திரி விழாவாகப் போற்றி வருகின்றனர்.

ஒருகால் மயிடாசுரன் என்பவன் விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் இடுக்கண் விளைத்துவர, தேவர்கள் அவனது கொடுமை பொறாது இறைவனிடம் முறையிட்டனர். அப்பெருமான் தனது பராசக்தியைத் தேவி வடிவில் தோன்றி அவ்வசுரனைக் கொன்று ஒழிக்குமாறு வேண்டினார்.

அத்தேவி போர்க்கு எழுதலும், திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் அவருக்குத் தங்கள் தங்கள் படைக்கலங்களை அளித்தார்கள். அவ்வரசுரனுடன் அவள் செய்த போர். மகாளய அமாவாசைக்கு மறுநாள் தொடங்கி ஒன்பது நாள் நடந்தது. பத்தாம் நாளாகிய தசமியன்று அவள் வெற்றி பெற்றதாகக் கூறப்படுகிறது. அந்த அருட்சக்தியின் கொற்றத்தைத்தான் நாம் விசயதசமியென்று கொண்டாடுகின்றோம். அப்போரில் அவள் வெற்றி பெறுதற்குத் துணை செய்த கருவிகளைப் பாராட்டி வழிபாடு செய்து 'ஆயுத பூசை' யென்று பரவுகின்றோம்.

அம்மயிடாசுரன் கொடுமையால், கலையறிவும் தொழில் வளமும் சிறவாது முடங்கிக் கிடந்ததாகவும், விசயதசமியன்று மறுவாழ்வு பெற்று மலரத் தொடங்கியதாகவும் கூறுவர். அதனால் நாமும், கல்வி தொழில் முதலியவற்றைத் தசமியன்று தொடங்குவது வழக்கமாக அமைந்துவிட்டது.

இப்புராண வரலாற்றின் உள்ளுறையாகக் கிடக்கும் கருத்தை நோக்குமிடத்து, மயிடாசுரன் என்பது, நமது தொழில், செயல், உணர்வு, ஊக்கம் ஆகிய பண்புகளை அழிக்கின்ற தீய சக்தியாகவும் அவ்வசுரனொடு போர் செய்த தேவியை,

**"இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி இடம் பாவம் கெடுத்து"....**

நல்லொளி பரப்பி நன்னெறி காட்டும் அருட்சக்தியாகவும் கொள்வது பொருந்தும்.

இவ்விரண்டிற்கும் உள்ள போராட்டம், அதாவது, தீமைக்கும் நன்மைக்கும் இடை நிகழும் இப்போராட்டம் – மிக்க ஆற்றல் வாய்ந்ததொன்று.

நன்மை, தீமையை வெல்ல வேண்டுமென்றால் எளிதில் இயலாது. பல நாட்கள் நடைபெறும். போர்க்குப் பின்னரே, நன்மை தரும் உயர்பண்பு வெற்றி பெற இயலும், இதுவே இவ்வரலாற்றைப் பின்பற்றி நிகழும் இக்கலை விழாவின் நுண்பொருள்.

ஆகவே, கலை விழா எடுத்துக் கலைவணக்கம் செய்யும் இக்கவினுடைய நாட்களில், நம் கருத்தில் எழும் தீய நினைவுகளை அடக்கித் தூய எண்ணமும் தூய மொழியும் தூய செயலும் மேம்படச் செய்வதற்கு நாம் தேவியைப் போற்றி, ஆற்றவும் முயல்வோமாக.

●


## திருக்கோயில்

### திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

சென்ற இதழ் தொடர்ச்சி

**பித்தனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே**

மனம் தான் மக்களின் நல்வழிக்கும் தீயவழிக்கும் வித்திடுவதாகும். மனத்தில் நல்லதையே நினைத்து, நினைத்ததை வாயினால் சொல்லி, சொன்னதை உடலால் செயல்படுத்த வேண்டும். இதனையே 'திருகரண சுத்தி' என்பர். இந்த மூன்று செயல்களிலும் தூய்மை இல்லாதார் திருமாலை வணங்குவதற்கு உரிய தகுதி அற்றவராவர். மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளைக் கொண்டு தொடு உணர்வு, நன்மையை பேசுதல், நல்லதைக் காணுதல் எம்பெருமானைக் கண்டு களித்தல், நறுமணங்களையே முகர்தல், எம்பெருமான் புகழையே கேட்டல் போன்றவற்றை உணர்ந்து செயல்பட வேண்டும். இதனையே தொண்டரடிப்பொடி யாழ்வார் **"காவலில் புலனை வைத்து"** என்றார்.

**''மனத்திலோர் தூய்மையில்லை**
**வாயிலோர் இன்சொல் இல்லை"**
(திருமாலை –30).

**"வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க"**
(திருப்பாவை –5)


**"என் கண்ணனைக் கண்ட கண்கள்**
**மற்று ஒன்றினைக் காணாவே"**
(அமலனாதிராஜன் –10)

எனும் அருளிச் செயல்கள் இங்கு நோக்கத்தக்கனவாகும்.

என் திருவரங்கன், எவ்விதத்திலும் யான் தீயகுணமுடைய கண்டவர்களோடு கூடிப் பழகி, கெட்டுப் போகாதபடியும் என் மனம் கெடாத வாறும் காத்தருளினான்.

ஆதலால், அவன் தான் எனக்குத் தலைவன், அத்தலைவனுக்கே என்னை அடிமைப்படுத்தினேன். எனவே, அவனை என்தலைவனே! என் திருவரங்கனே! என்று அழைத்து மகிழ்கின்றேன்.

**"எத்திறத்திலும் யாரொடும்" கூடும்**





சேரலர் கோன்

# திருவரங்கனும் சேரலர் கோனும்

அச்சித்தந்தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால்
அத்தனே! அரங்கா! என்று அழைக்கின்றேன்
பித்தனாய் ஒழிந்தேன் என்பிரானுக்கே"
(பெருமாள் திருமொழி 3–7)

**பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே**

பித்தின் முதிர்ந்த நிலையே பேயனாம் தன்மை. (பேய் என்பது ஆவி) ஆவிகள் தன்னால் எதையும் அனுபவிக்க முடியாமல் யார் பேரிலாவது தொடர்ந்து, தான் என்ன செய்கின்றோம் என்பதைப் பற்றி கவலைப் படாது, ஆடிப்பாடி தன் ஆவல்களைப் பூர்த்தி செய்து கொள்ளும். யார் என்ன நினைப்பார்கள் என்பதை நினைக்காமல் செயல்படும் நிலையே.

பக்தியில் முதிர்ந்த நிலையை அடைந்தவர் களும் இப்படியே எம்பெருமானையே நினைக்காமல் செயல்படும் நிலையே. பக்தியில் முதிர்ந்த நிலையை அடைந்தவர் களும் இப்படியே எம்பெருமானையே நினைந்து ஆடிப்பாடி அகம் மகிழ்வர்.

இந்த நிலையை அடைந்ததனால் தான் சென்னை திருமயிலையில் பிறந்த ஆழ்வாரைப் ''பேயாழ்வார்'' என்று வழங்குகின்றோம். பக்தியில் ஈடுபடாத ஆவிகள் சாதாரணப் பேய்கள் எனப்படும். இறை நெறியில் ஈடுபடாத இவ்வுலக மக்கள் பேயர்களே. அவர்களுடன் கூடாது, இறை நெறியில் ஈடுபட்ட யானும் பித்து நிலையில் முதிர்ந்த பேயனே. இதனைப் பற்றி பேசி என்ன பயன்? எப்படியோ யான் பக்தி நெறியில் ஈடுபட்டு விட்டேன்.

துவாபரயுகத்தில் ஆயர்களின் தலைவனான கண்ணனெம் பெருமானாக அவதரித்தவனே திருவரங்கத்தில் திருவரங்கனாக அர்ச்சை நிலையில் எழுந்தருளி அருள் சுரந்து வருகின்றேன். பக்தியின் முதிர்ந்த பேயனாகிய யான், ஆயர்களின் தலைவனே! திருவரங்க நாதனே! என்று கூவி அழைக்கின்றேன்.

**"பேயரே எனக்கு யாவரும்**
**யானுமோர் பேயனே எவர்க்கும் இதுபேசி என்,**
**ஆயனே! அரங்கா! என்று அழைக்கின்றேன்**
**பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே"**
(பெருமாள் திருமொழி 3–8)

**இங்கு வல்லவர்க்கு ஏதம் ஒன்றில்லையே**

நாம் இப்பிறவியிலிருந்து உய்வு பெற்று, திருவைகுண்டமாகிய, நலமந்தமில்லதோர் நாட்டினை அடைய வேண்டுமானால், பூலோக வைகுண்ட நாதனாகிய திருவரங்கனை அடைந்து, வணங்கி, வழிபட வேண்டும். நமக்கெல்லாம் காட்சி கொடுத்து, அருள் சுரந்து, நம்மையெல்லாம் வைகுந்த நாட்டினுக்கு அனுப்பி வைக்கவே திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ளான்

**"காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம்" (திருமாலை –10)**

திருவரங்கன் தனது வலக் கரத்திலே சக்கரத்தாழ்வானை ஏந்தியுள்ளான். அத்திருவரங்கன் திருவடிகளில் பொருந் திய, பக்தி மணம் கமழும் மனமுடைய வாய். உலகில், பக்தியில் சிறந்த பெரும் பித்தனாய் விளங்கினார் சேரநாட்டு ஆழ்வார். சேரர் குலத்தவர் புகழையெல் லாம், தான் அடைந்து சேரர் குலம் சிறக்கத் தோன்றியதால் இவர் குலசேகரன் எனப் பெயர் சூட்டப்பட்டார். பக்தியில் ஆழங்கால்பட்டதால் "குலசேகராழ்வார்" என்று சிறப்புப் பெயர் பெற்றார்.

குலசேகராழ்வார் அருளிய இப்பதிகத்தின் பாசுரங்களைப் பாடு பவர்க்கும், கேட்பவர்க்கும், எம்பெருமான் திருவருளைப் பெற்று, திருநாடு அடைய எந்தவித இடையூறுகளும் உண்டாகாது. எனவே, எளிதில் திருநாடு அடைவர்

**"அங்கை ஆழி அரங்கன் அடியினை**
**தங்கு சிந்தை தனிப்பெரும் பித்தனாய்க்**
**கொங்கர் கோன் குலசேகரன் சொன்ன சொல்**
**இங்கு வல்லவர்க்கு ஏதம் ஒன்றில்லையே"**
(பெருமாள் திருமொழி –3–9)

**– முனைவர் ஏ.பரந்தாமராமானுஜதாசர்.**




# திருக்கோயில்களும் திருமுறைகளும்

தமிழகம் திருக்கோயில்களுக்கும், அதைச் சார்ந்த கலைகளுக்கும் பெயர் பெற்றது. வரலாற்றின் ஆரம்ப கட்டங்களில், பெரிய திருக்கோயில்கள் இருந்ததாக ஆதாரம் இல்லை. ஆலமரம் போன்ற மரங்களின் அடியில்தான் அவை இருந்தன. தமிழகத்தில் உள்ள, முதலாவது, கற்கோயில், கி.பி., ஏழாம் நூற்றாண்டில் மகேந்திர பல்லவனால் அமைக்கப்பட்ட சிறிய குகைக் கோயில். இது மண்டகப்பட்டு என்ற ஊரில் இன்றைய விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளது. அக்கோயிலை மரமின்றி, சுதையின்றி, உலோகமின்றி, செங்கலின்றி தோற்றுவித்தேன் என்று அம்மன்னன், அங்குள்ள கல்வெட்டில் கூறுகிறான். முழுமையாக கற்களால் கட்டப்பெற்ற முதற்கற்கோயில், காஞ்சியில் உள்ள, கைலாசநாதர் கோயில் ஆகும்.

அதன் பின்னர் கோயில்கள் பல்வேறு விதமாக கட்டப்பட்டன. இரண்டு வகையான கட்டிடக் கலை நூற்கள் தோன்றின. ஒன்று, மயன் என்ற ஒப்பற்ற தச்சனால் உருவாக்கப்பட்ட மயமதம் என்ற முறை. இன்னொன்று, விச்வகர்மா என்ற தெய்வத் தச்சனால் ஏற்படுத்தப்பட்டது. 'மயமதம்' தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் போற்றப்பட்டது. 'விஸ்வகர்மீயம்' வடநாட்டில் போற்றப்பட்டது. இவையே கோயில்கள் கட்டுவதற்கான அடிப்படை இலக்கண நூல்கள் எனலாம். இந்தியாவின் வடபகுதியில் உள்ள கோயில் அமைப்பை நாகரம் என்றும், தென்னாட்டில் உள்ளதைத் 'திராவிடம்' என்றும் இடையில் உள்ளதை 'வேகரம்' என்றும் கூறலாம்.

இதை ஒட்டி பல்வேறு வகையான கோயில்கள் தோன்றின. மூவர் முதலிகளில் இரண்டாமவரான, அப்பர் சுவாமிகள் (திருநாவுக்கரசர்) பல கோயில்களைப் பற்றிக் கூறுகிறார்.

**பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்**
**பெருங்கோயில் எழுபதினோடு எட்டும் மற்றும்**
**கரக்கோயில் கடிபொழிற்சூழ் ஞாழற் கோயில்**
**கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்கோயில்**
**இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்**
**இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்**

*திருக்கோயில் சிவனுறையும்*
*கோயில் சூழ்ந்து*
*தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே!*

இந்தக் கோயில்களில் வழிபாடுகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பதற்காகவே, **'ஆகம நூல்கள்'** எழுந்தன.

இந்த ஆகம முறை வழிபாடு தமிழ்நாட்டில் மட்டும் தான் உள்ளது. வடநாட்டில் வைதிக நெறியான வழிபாடு உள்ளது.

**ஆகமங்கள்**

"கோயில்களில் தெய்வ உருவங்களைப் பிரதிஷ்டை செய்தல், வேள்வியும் விழாவும் எடுத்தல் முதலிய முறைகளைக் குறிக்கும் நூல்களுக்கு ஆகம நூல்கள் என்று பெயர். இவைகளுக்குத் தந்திர சாஸ்திரம் என்னும் பெயர் உண்டு. தந்திர சாஸ்திரங்கள் வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை. நாயன்மார்களும், ஆழ்வார்களும், எல்லாம் வல்ல இறைவனை வேத முதல்வன் என்றும், 'அருமறை அங்கம் ஆகமம் வகுத்தவன்'' என்றும் அழைக்கின்றனர். ஆகமங்கள் சிவ வழிபாட்டைக் கூறுபவை என்றும், விஷ்ணு வழிபாட்டைக் குறிப்பவை என்றும் இருவகைப்படும். சிவாகமங்கள், காமிகம், காரணம், அஜிதம் முதலிய 28 நூல்களாகும். வைணவாகமங்கள் வைகானசம் என்றும், பாஞ்சராத்ரம் என்றும் இரு வகைப்படும். விகனஸ் என்ற முனிவரின் வழியைப் பின்பற்றியது வைகானசமாகும். இவ்வாகமங்கள் அனைத்தின் அடிப்படைத் தத்துவமும் ஒன்றே. மனிதன் தான் உடுப்பதும், உண்பதும், கேட்பதும், காண்பதும், களிப்பதும், ஆண்டவனின் அருளால் என்று கருதினான். எனவே, அவையனைத்தையுமே கடவுளுக்குப் படைத்துப் பின்னரே தான் கொண்டான். இதுவே ஆகமங்களின் அடிப்படைத் தத்துவமாகும். பரம்பொருளை உருவங்களில் இருக்க வேண்டுதல் ஆசனம் அளித்தல், நீராட்டுதல், சந்தனம் முதலியன அளித்தல், பட்டாடை அணிவித்தல், மலர் மாலைகள் சூட்டல், ருசியான உணவு, செவிக்கினிய இசை, கண்ணுக்கினிய கூத்துக்கள் இவற்றால் மகிழ்வுறுத்தல் முதலிய பல அங்கங்கள் கொண்டதே வழிபாட்டு முறையாகும். ஆண்டுதோறும் பல்வேறு விழாக்களை எடுக்கும் முறையையும் ஆகம நூல்கள் குறிக்கின்றன.

**இசை**

கோயில்களில் தெய்வ வழிபாட்டின் அங்கமாகவே இசையும் வாத்யங்களும் விளங்கின. 16 பிரிவுகளைக் கொண்ட ஷோடசோபசாரத்தில் பதினான்காவது அங்கமாக இசையும் இசைக் கருவிகளும் குறிக்கப்படுகின்றன. நிருத்தம் பதினைந்தாவதாகக் கருதப்படுகிறது.

**கேய வாத்யம் சதுர்தசம்**
**நிருத்தம் பஞ்சதசம் சைவ**

கடவுளை வேதமுதல்வர் என நம் ஆன்றோர்கள் கருதினர். எனவே அவரது அவையில் இருக்கு, யஜுர், சாம வேதங்கள் ஓதப்பட்டன. முக்கியமாக சாமவேதம் இசையாகவே அமைந்த காரணத்தால் அதற்குத் தனிச்சிறப்பும் அளிக்கப்பட்டது என்று கல்வெட்டி லிருந்து அறிகிறோம். தமிழ் நாட்டுக் கோயில்களுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இங்கு அப்பர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்களும், நம்மாழ்வார், ஆண்டாள், திருமங்கை போன்ற ஆழ்வார்களும், தலங்கள் தோறும் சென்று தெய்வீகத் திருப்பதிகங்களைப் பாடியுள்ளனர். அவற்றையே தேவாரம் என்றும் திவ்யபிரபந்தம் என்றும் அழைக்கிறோம். இத்திருப்பதிகங்கள் இசைப் பண்களாகக் கோயில்தோறும் ஓதப்பட்டு வந்தன. இவற்றோடு முருகப் பெருமான் மீது பாடப்பட்ட திருப்புகழையும் சேர்த்துத் தமிழகத்தையே தெய்வீக இசையுலகாக மாற்றிப் "பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி" என்று பரமனையே பாடினர் தமிழ் மக்கள்.

இத்திருப்பதிகங்களைப் பாடும்போது இசைக் கருவிகளும் முழங்கின. சிறப்பாகக்

**அழ.முத்துப்பழனியப்பன், எம்.ஏ.,பி.எல்., உதவி ஆணையர்.**

கோயில்களில் வீணை வாசிக்கப்பட்டது என்று கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். குழல், கெட்டி மத்தளம், உடுக்கை முதலிய கருவிகள் இசையோடு இணைத்து வாசிக்கப்பட்டன.

**துத்தங் கைக்கிளை விளரி தாரை**
**முழை யிளி யோசை பண்**
**கெழுமப்பாடிச்**
**சச்சரி கொக்கரை தக்கையோடு**
**தகுனிதந் துந்துபி தாளம் வீணை**
**மத்தளம் கரடிகை வன்கை**
**மென்தோல்**
**தமருகங் குடமுழா மொந்தை வாசித்**
**தத்தனை விரவினோடாடு மெங்கள்**
**அப்பனிடம் திரு ஆலங் காடே**

என்ற காரைக்காலம்மையின் பதிகத்திலிருந்து தெய்வீக இன்னிசையின் சிறப்பை அறியலாம். இசைப் பண்கள் அக்காலத்தே சிறந்து விளங்கின. ஒவ்வொரு காலத்தே ஒவ்வொரு பண்ணைப் பாட வேண்டும் என்ற நியதி உண்டு.

**பூர்வ சந்தியாம் காந்தாரம்**
**ஷாடவம் ச தத; பரம்**
**மத்யான்ஹே நட்ட ராகம் ச்யாத்**
**கௌசிகம் ச தத; பரம்!**
**ஸாயே து சைந்தளம் ப்ரோக்தம்**
**அதிராத்ரே து பஞ்சமம்**
**பரதோக்தம் யதா நிருத்தம்**
**ஸந்திம் பிரதி ஸூகொரயேத்**

அதிகாலையில் காந்தாரப் பண்ணையும், பின்னர் ஷாடவத்தையும், நடுப்பகலில் நட்டராகத்தையும், பின்னர் கௌசிகத்தையும், மாலையில் இந்தளம் என்ற பண்ணையும், அர்த்த ராத்திரியில் பஞ்சமம் என்ற பண்ணையும் பாடி பரத முனிவர் நாட்டிய நன்னூலில் கூறிய வழிப்படி சந்நிதிகளில் நிருத்தம் செய்ய வேண்டுமென்று ஆகமங்கள் குறிக்கின்றன. சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பே, இப்பண்களை வரிசைப்படுத்திக் கல்லிலே வெட்டி வைத்துள்ள பெருமை தமிழகத்திற்கு உண்டு. குடுமியாமலை, திருமெய்யம் என்ற இடங்களில் 1300 ஆண்டுகளுக்கு முன்னரே, மத்யமக்ராமம் ஷட்ஜம், ஷாடவம், சாதாரிதம், பஞ்சமம், கைசிகமத்யமம், கௌசிகம் என்ற பண்களைப் பாடும் வகை எழுதப்பட்டுள்ளது. இதை ருத்ராசார்யனின் சீடனான குணசேனன் என்ற மன்னன் இயற்றினான் என அறிகிறோம். தென்னாட்டையாண்ட மன்னர்கள் அனைவரும் இசையிலும் கூத்திலும் சிறந்த ஆர்வம் காட்டினர். மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னன் காந்தர்வ சாத்திரம் ஒன்றை இசைப்படுத்தினான் என்றும் அறிகிறோம். வீணா நாரதன் என்று பல்லவ மன்னன் பட்டம் கொண்டிருந்தான். கேரளத்தில் இப்போதும் சண்டவாத்யம் என்றழைக்கப் படும் கொட்டு சிறப்பாக உள்ளதைக் காண்கிறோம். இது பண்டைய காலத்தில் தென்னாடு முழுவதும் சிறப்புற்றிருந்தது. கோயில்களில் சங்கவாத்யங்கள் வாசிக்கப் பட்டன. முத்திரைச் சங்கு என்று இதை அழைப்பர்."

### திருமுறைகள்

சங்க காலத்திற்குப் பின்னர், வேற்று மொழி ஆதிக்கமும், வேற்று மத ஆதிக்கமும் ஏற்பட்டன. ஆகவே, சைவத்தில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், (அப்பர்), சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்களும், வைணவத்தில் பன்னிரண்டு ஆழ்வார்களும், தமிழில் இறைவனைப் போற்றி வழிபாடு செய்து, அற்புதங்கள் செய்தனர்.

இவர்கள் பாடியபாடல்களை எழுது மறை என்றும், வடமொழி வேதங்களை எழுதாக்கிளவி, எழுதா மறை, அதாவது எழுத்துக்களில் எழுதப்படாதவை என்றும் குறிப்பது வழக்கம்.

"வண்டமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்" என்பது பெரிய புராணத் தொடர்.

எழுது மறை மொழிந்த கழுமலை முனிவன்' என்பது தில்லைக்கலம்பகம்.

இப்பெருமக்கள் பாடியவற்றில், கிடைத்தவற்றை, 12 திருமுறைகளாக முன்னோர்கள் வகுத்தனர். அவையாவன.

1 முதல் 3 முடிய திருமுறை ஞானசம்பந்தர் பாடியது.

4 முதல் 6 முடிய திருமுறை திருநாவுக்கரசர் பாடியது.

7ஆம் திருமுறை – சுந்தரர் பாடியது.

8ஆம் திருமுறை – மாணிக்கவாசகர் பாடியது (திருவாசகம் மற்றும் திருக்கோவையார்)

*9ஆம் திருமுறை திருவிசைப்பா பல பெருமக்கள் பாடியது.*

*10ஆம் திருமுறை திருமூலர் பாடியது.*

*11ஆம் திருமுறை பல பெருமக்கள் பாடியது.*

*12ஆம் திருமுறை சேக்கிழார் அருளிய பெரிய புராணம்.*

இவற்றில் முதல் ஏழு திருமுறையும் தேவாரம் எனப்படும்.

**பஞ்ச புராண மரபு**

இவற்றை இறைவன் முன்னர், வழிபாட்டின் போது பாடப்பட வேண்டும் என்ற மரபை வகுத்தனர். எல்லாப் பாடல்களும் பாட முடியாது.

ஆகவே ஏழு திருமுறைகளான தேவாரத்தில் ஒரு பாட்டு

திருவாசகத்தில் ஒரு பாட்டு

திருவிசைப்பாலில் இரண்டு பாட்டு

பெரிய புராணத்தில் ஒருபாட்டு

இதுவே பஞ்ச புராண முறை. ஓதுவார்கள் கட்டாயம் இறை வழிபாட்டின்போது பாட வேண்டும் என்பதை நியதியாக வைத்தனர்.

"திருமுறைகளும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களும் தொகையாக 11ஆம் நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பியாலும், நாதமுனிகளாலும் வகுக்கப் பெறுமுன்பே கோயில்களில் இவை ஓதப் பெற்றனவென்று பல கல்வெட்டுகள் கூறுகின்றன. முதற் பராந்தகன் காலத்திலேயே ஆத்தூர், லால்குடி கோயில்களில் நாள்தோறும் பூசை வேளைகளில் திருப்பதியம் ஓதுவதற்காக ஓதுவார்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கும் முன்பாக, கோயில் பணியாளர் களில் திருப்பதியம் பாடுவதற்கான ஓதுவார்கள் நியமனம் பெற்றிருந்தனர் என்று பல்லவன் விஜய நந்திவர்மன் காலத்துத் திருவல்லம் கல்வெட்டு கூறுகிறது. திருவிடை வாசல் கல்வெட்டு ஒன்றில் ஒரு திருமுறை யிலும் இதுவரை அகப்படாத சம்பந்தரது தேவாரப் பதிகம் ஒன்று பொறிக்கப் பட்டுள்ளது. கோயில்கள் இசைத் தமிழைப் பாதுகாத்ததை நமக்கு உணர்த்துகிறது.

அண்மையில் திருச்சியில் உள்ள தான்தோன்றீசுவரம் கோயிலில் கண்டெடுக் கப்பட்ட புதிய கல்வெட்டு ஒன்றில், இக்கோயி லில் திருப்பதியம் பாடுவார் பயன்பாட்டிற் காகக் கோயிலுக்கு நில விற்பனை செய்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் பதினொன்றாம் நூற்றாண்டாகும்.

திருமுறை பாடுவோர்க்கு தனி ஊதியமும், நிலங்களும் விடப்பட்டுள்ளன. விழுப்புரம் மாவட்டம், திருவாமாத்தூர் திருக்கோயிலில், கண் இழந்தவர்கள் தேவாரம் பாடவும், அவர்களை வழி நடத்துபவனுக்கும், நிலங்கள் விடப்பட்டுள்ளன. பல்லவர்கள் காலத்திலேயே திருப்பதிகங்கள் ஓதப்பட்டன.

திருவல்லம் திருக்கோயிலில், நந்திவர்ம பல்லவனின் 17ஆம் ஆட்சியாண்டில், கல்வெட்டு பின்வருமாறு கூறுகிறது.

"திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும், திருப்பதிகம் பாடுவாருள்ளிட்ட பல பணி செய்வார்க்கும் நெல்லு நூனூற்றுக் காடியும்": என்று வருகிறது.

இது தவிர, திருக்கோயில்களில் தேவாரம் பாடுவதைப் பற்றி

திருவெறும்பியூர் (திருச்சி), பழவூர், திருவாவடுதுறை, திருத்தவத்துறை (லால்குடி) ஆத்தூர் ஆகிய கோயில்களில் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

திருப்பூர் மாவட்டம், திருமுருகன் பூண்டி, அருள்மிகு திருமுருகநாதர் திருக்கோயிலில், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையைப் பாடும்போது, அதைப் பாடுகின்ற பெண், கோயில் கருவறைக்குள் சென்று பாடலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சைவத் திருமுறைகள், தமிழ் நாட்டுக் கோயில்களில் மரபு மற்றும் வரலாற்றோடு பிணைந்தவை. இவற்றைப் பாடுவோர் ஓதுவார்கள் எனப்பட்டனர். இவ்வாறு நேரடியாக தேவாரப் பதிகம் பெற்ற கோயில்களை, "பாடல் பெற்ற தலங்கள்" என்றும் குறிப்பிடுவது மரபு, பாடல் பெற்ற தலங்கள் மொத்தம் 276 ஆகும். வேறு ஏதாவது பாடலில், குறிப்பு வந்தால் அதை வைப்புத்தலம் என்பதும் மரபு.

இவ்வாறு, பாடல் பெற்ற சிவத்தலங் களையும், பாடல் குறிப்புப் பெற்ற வைப்புத் தலங்களையும், பார்த்து, அங்கு எழுந் தருளியுள்ள இறைவனை வழிபட வேண்டும். அத்தகைய திருக்கோயில்களைப் போற்றிப் பாதுகாப்பதும், இன்றைய தலைமுறையின் இன்றியமையாகக் கடமையாகும்.

# நம்பியாண்டார் நம்பி

திருமுறை அன்பர்கள் எல்லாம் முதலில் வணங்க வேண்டியவர்களாக இருவர் உள்ளனர்.

1. இராஜ இராஜ சோழன்

2. நம்பியாண்டார் நம்பி. இவர்கள் இருவரும் இல்லையானால் நாம் இன்று ஓதிக் கொண்டிருக்கும் திருமுறைகள் நமக்கேது?

திருமுறைகளைக் கண்டெடுக்கக் காரணமாய் இருந்தவன் இராஜ இராஜ சோழன். திருமுறைகளைக் கண்டெடுத்துக் கொடுத்தவர் நம்பியாண்டார் நம்பி.

நம்பிகளின் வரலாறு சுவையானது. ஒரு நாள் தன் தந்தையார் ஆற்ற வேண்டிய கட்டளைப் பூசையை அவர் வேறூர் சென்ற காரணத்தால் இவர் ஏற்றுச் செய்ய வேண்டி இருந்தது. பூஜையோ கணபதி பூசை. ஊர் திருநாரையூர். நம்பியின் வயது அப்போது ஐந்து. பூஜையில் அமுது படைக்கும் கட்டம் வந்தது. குழந்தை உண்மையாகவே கல்லுப்பிள்ளையார் நெல்லுச் சோற்றை நிதானமாக எடுத்துண்ணும் என்று நினைக்கிறது. அது நடவாதபோது. தனது பூஜையில் ஏதோ குறைபோலும், அதனால் தான் பிள்ளையார் உண்ணவில்லை என்று எண்ணி நம்பி சந்தனக் கல்லில் தலையை மோதி உயிர்விடத் துணிகிறது. பிள்ளையாராகிய பரம்பொருள் கருணை பூத்த கடலாயிற்றே!

என்ன ஆச்சரியம்! உடனே நம்பி படைத்த உணவை உண்டதாகக் காட்டியருளி கணபதி மறைந்தார். அதோடு பூசை முடித்துக் கொண்டு பள்ளிக்குச் செல்லப் புறப்படும் போதுதான் நம்பிக்கு தான் பள்ளிக்குத் தாமதமாகச் செல்வதும் அதனால் ஆசிரியர் அடிப்பார் என்றும் நினைவுக்கு வந்தது.

'உன்னால் தான் தாமதம்! நீ அடம்பிடிக்காமல் உண்டிருந்தால் பள்ளிக்கு நேரமாகி இராதல்லவா! என்று கணபதியிடம் நம்பி முறையிட்டார். கணபதி முறுவள் செய்தபடி. ''நீ எந்தப் பள்ளிக்கும் இனிப்போக வேண்டாம்!" உனக்கு எல்லாக் கல்வியும், அதாவது உலகியல் மற்றும் அருளியல் கல்வியனைத்தும் கணத்திலே அருளுகிறோம்!" என்று அருளினானாம். நம்பிக்கு உண்டான அருட்கல்வியின் அளவை யார் கூற இயலும்! இந்த அதிசய நிகழ்ச்சியைக் கேட்டறிந்து இராஜ இராஜ சோழன் அளவிறந்த படையலைக் கொணர்ந்து படைக்க நம்பிகள் கணபதியை வேண்ட அவ்வளவு படையலையும் உண்டதாக முன்போல் மறைந்தருள அரசன் நம்பிகளான ஐந்து வயதுக் குழந்தையை அடிபணிந்து வேண்டினான்.

''இப்படையல் மறைந்ததுபோல இறைவனுக்கு மூவர் முதலிகள் எனப்படும் சம்பந்தர். அப்பர், சுந்தரர், படைத்த தமிழ்ப் படையலான திருப்பதிகங்கள் காலத்தால் மறைந்து போயின. அவற்றைக் கண்டெடுத்து உதவ வேண்டும்" என்று வேண்டினான்.

'தில்லையில் தீட்சிதர்கள் ஓர் இருட்டறையில் அவற்றை மறைத்துப் பூட்டி இருக்கின்றனர்" என்று கணபதி நம்பிக்குத்



தகவல் தெரிவிக்க அரசனுடன் நம்பிகள் அங்கே சென்று திருமுறைகளை எடுத்து உதவியதாகச் சொல்கிறது வரலாறு. இவ்வாறு நம்பிகள் திருமுறைகளை எடுத்து உதவவில்லையானால் கரையான்களால் அழிந்ததுபோக இன்று கிடைத்திருக்கும் திருமுறைகளை நாம் பெற்றிருக்க இயலுமா?

திருமுறைகளைக் கண்டெடுத்ததோடு விடாமல் அவற்றை சைவ சித்தாந்தக் கொள்கை அடிப்படையில் முறைவைப்பாக கோர்த்து முதல் ஏழு திருமுறைகளை அமைத்தார். அதற்கு அடங்கன் முறை என்று பெயர். அதன் பின் மேலும் பல அருளாளர்களின் பாடல்களைத் தொடுத்து திருமுறைகளை மொத்தம் பதினொன்றாக்கினார். அவருக்குப்பின் சேக்கிழார் பாடிய பெரியபுராணம் 12–ஆம் திருமுறையாகச் சேர்க்கப்பட திருமுறைகள் மொத்தம் பன்னிரண்டாயிற்று.

இதில் 11–ஆம் திருமுறையில் நம்பிகள் பாடியருளிய 10 நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை அடிப்படையாகக் கொண்டுதான் சேக்கிழார் பெரியபுராணத்தை விரித்துப் பாடினேன் என்று சேக்கிழாரே பாடி இருக்கிறார். எனவே சேக்கிழாரே போற்றிய பெருமை நம்பிகளுக்கு உண்டு.

11–ஆம் திருமுறையில் நம்பிகள் அருளிய நூல்கள் பத்திலும் பலப்பல சிக்கல்கள் விடுபட்டிருக்கின்றன. சிக்கல் பல தீர்த்த செந்நெறிச் செம்மல் என்றே நம்பியாண்டார் நம்பிகளைக் கூற வேண்டும்.

அவர் முதலில் திருமுறைகள் எங்கே உள்ளன என்ற சிக்கலைத் தீர்த்தது தொடங்கி எத்தனையோ சிக்கல்களை வரிசையாகத் தீர்த்த பெருமை இவருக்கு உண்டு. அவற்றை எல்லாம் நிரல்படத்தொகுத்தாலே அது ஒரு தனி நூலாகி விடும். அவ்வகை நூலொன்று வெளிவர திருவருள் துணை புரியுமாக!

**–நன்றி: ஆசிரியர்**

**தெய்வமுரசு இதழ்**

# வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயம்



"பசுவின் உடலில் பால் பரவலாக இருப்பினும் அதனை மடிக்காம்புகள் வழியாகவே நாம் பெறுகிறோம். அதுபோல ஆண்டவன் எங்கும் நிறைந்து இருந்தாலும் அவனை ஆலயம் சென்று வழிபடும் போதுதான் நாம் ஆத்ம திருப்தியை அடைகிறோம்," என்பது திருமுருக கிருபானந் தவாரியாரின் வாக்கு. இதன் அடிப்படையில் தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்," என்ற பழமொழியும் உண்டானது.

அந்த வகையில் இன்று நாம் அறிந்து கொள்ள இருப்பது மிக தொன்மையான வரலாற்றை கொண்டுள்ள வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயம் ஆகும்.

கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற் காலம் என ஆதி மனிதர்கள் வாழ்ந்த பகுதி – அத்திரி முனிவர் வழிபட்ட இறைவன் –மூன்று நிலவறைகள் கொண்ட திருக்கோயில் – பல்வேறு மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட ஆலயம் – சைவ வைணவ சிற்பங்கள் நிறைந்த திருத்தலம். முதலாவது சுதந்திரப் போராட்டமான சிப்பாய் கலகம் நிகழ்ந்த இடம் – வேலூர் மாவட்டத்தில் மிக முக்கிய திருக்கோயில் என பல்வேறு பெருமைகள் கொண்ட திருக்கோயிலாக திகழ்வது அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் ஆலயம்.

சென்னை – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில், சென்னைக்கு மேற்கே 140 கி.மீ., தொலைவில் தமிழகத்திற்கும் ஆந்திரத்திற்கும் எல்லை மாவட்டமாக வேலூர் அமைந்துள்ளது. இவ்வூருக்கு ஏராளமான பேருந்துகள் வந்து செல்கின்றன. இரயில் மார்க்கமாக வர விரும்புவோர் காட்பாடியில் இறங்கி எளிதில் வரலாம்.

**தொன்மை சிறப்பு**

சான்றோர்கள் பலர் தோன்றிய தொண்டை வள நாட்டின் ஒரு பகுதியாக திகழும் வேலூர் கி.பி.450க்கு முன்பே ஆட்சி செய்து வந்த பாணர்களின் நாடான 'பெரும் பாணப்பாடியின்' ஒரு பகுதியாக இருந்துள்ளது. கி.பி.450இல் சிம்மவர்ம பல்லவனால் அமர்த்தப்பட்ட அரிவர்மன் என்ற கெங்கை அரசனின் ஆளுகையில் இருந்திருக்கிறது. கி.பி.ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை பல்லவர் ஆட்சியின் கீழும் பிற்கால சோழர்கள் மற்றும் சம்புவராயர் ஆட்சியிலும், வேலூர் பகுதி இருந்து வந்தது. நாயக்க மன்னர் ஆட்சியின்போது இவ்வூர் சிறந்த தலைநகரமாகவும் விளங்கிற்று. இதன் பின் முகம்மதியர்கள், மராட்டியர்கள், ஆற்காடு நவாப், ஹைதர் அலி, பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோரது போர்க்களமாக திகழ்ந்தது. கடைசியில், ஆங்கிலேயர் வசமானது. அப்போது இவ்வூர், கர்நாடக வரலாற்றில் முக்கிய பங்கேற்றது.

முதன் முதலாக சுதந்திரத்திற்கு வித்தாக அமைந்த 'சிப்பாய்க்கலகம்' என்று அழைக்கப்பட்ட முதலாவது விடுதலைப் புரட்சி, வேலூர் கோட்டையில் கி.பி.1806 நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. வேலூர் கோட்டை ஒரு கலைப் பெட்டகம் என அயல்நாட்டவர்களால் பாராட்டப்பட்ட கோட்டையாகும்.



இக்கோட்டைக்குள் கட்டப்பட்ட திருக்கோயிலே வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயம் ஆகும். ஜலகண்டேஸ்வரர் ஆலயம் மற்றும் கல்யாண மண்டபம் பிற்கால விஜயநகர கலைப் பாணிக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

**கல்வெட்டுக்களில் வேலூர்**

பாலாஜி மலை அடிவாரத்து கல்வெட்டில் (கி.பி.965) இவ்வூர், வேலூர் பாடி என குறிப்பிடப்பட்டுள்ளது. சேண்பாக்கம் கல்வெட்டில் வேலூர் பெயர் காணப்படுகிறது. இவற்றிலிருந்து வேலூரின் தொன்மையை உணர முடிகிறது. பெருங்கற்கால மனிதர்கள் வாழ்ந்த சுவடுகள் மற்றும் எச்சங்கள் வேலூர் மலைப் பகுதியில் காணப்படுகின்றன. பெருங்கற்காலத்தை சேர்ந்த 'பாண்டவர் குழிகள்' எனப்படும் ஈமச் சின்னங்கள் இன்றும் காணப்படுகின்றன.

மகேந்திர வாடி என்னும் ஊரிலும், விளாப்பாக்கத்திலும், பிரம்ம தேசம் எனப்படும் நாட்டேரியிலும், பல்லவர் காலத்திய சமணர்களின் படைப்புகள் இன்றும் காணப்படுகின்றன.

திருக்கோயிலுக்கு சதுப்பேரி, அளப்பாக்கம், முருக்கேரி, சிற்றேரி, அரும்பருத்தி, பெருமாள்நல்லூர், பெருமுகை, சொக்கனூர் ஆகிய கிராமங்கள், மானியமாக வழங்கப்பட்ட செய்தியும் கல்வெட்டு வாயிலாக அறியமுடிகிறது.

**கோயிலும் கோட்டையும்**

வேலூர் கோட்டை வனப் பகுதியில் அமைந்ததால் வனதுர்க்கம் என்றும், ஒரே ஒரு வாயிலை கொண்டுள்ளதால் ஏகமுக துர்க்கம் என்றும் அழைக்கப்படுகிறது. தரையில் கட்டப்பட்ட கோட்டைகளில் மிக சிறந்த கோட்டையாக வேலூர் கோட்டை திகழ்கிறது. இக்கோட்டை சம்புவராயர் மற்றும் நாயக்க மன்னர்களின் கலைபாணிக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. சுமார் 3 கி.மீ., நீள சுற்று மதில் சுவர் கொண்ட கோட்டை, 136 ஏக்கர் பரப்பளவில் சுற்றிலும் இரண்டு அடுக்கு கோட்டை சுவர்களும், அகழிக்கப்பாலும் பரந்த நிலப்பரப்பு கொண்டு விளங்குகிறது, கோட்டைக்குள் தற்போது ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயம், சர்ச், மசூதி, மத்திய – மாநில அலுவலகங்கள், குடியிருப்பு பகுதி, சிறைச்சாலை என பல்வேறு அமைப்புகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இக்கோட்டையின் குறிப்பிடத்தக்க சிறப்பு, அக்காலத்திலேயே அமைக்கப்பட்ட வடிகால் வசதியும், பாதாள கால்வாய் திட்டமும் ஆகும்.

ஜலகண்டேஸ்வரர் ஆலயம்

கோட்டையின் உள்ளே வடபகுதியில் சிவன் கோயில் அமைந்துள்ளது. பொம்மி ரெட்டி நாயக்க மன்னனால் (கி.பி.1544) வேலூர் கோட்டையும் கோயிலும் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. என்றாலும் இதன் கட்டிட அமைப்புகளை ஆய்வு செய்யும்போது கி.பி.13 முதல் 16ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்ட காலங்களில் இவை அமைக்கப்பட்டது தெளிவாகிறது. இக்கோயிலுக்கு தெற்கு கோயில் வாசல் வழியாக உள்ளே நுழைய வேண்டும். கோயிலின் அதிட்டானம் மற்றும் பாதாளக் கால்வாய் ஆகியவை தொல்லியல் ஆய்வின் மூலம் வெளிப்பட்டது.

**முதல் கோபுர வாயில்**

15 மீட்டர் அகலமும் 25 மீட்டர் நீளமும், 15 மீட்டர் உயரமும் கொண்டு, ஏழு நிலைகளாக அமைந்துள்ளது. ஒவ்வொரு நிலைக்கும் ஏறிச் செல்ல, மரத்திலான

படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. துவார பாலகர்கள், சிவன், பார்வதி, கணபதி, முருகன், முனிவர்கள் என கோபுரம் முழுமையும் சிற்பங்களாகவே காட்சி யளிக்கின்றன. கோபுர வாயிலின் வலப்புறம் பொம்மி ரெட்டி, திம்மிரெட்டி ஆகியோரின் புடைப்பு சிற்பங்கள் அமைந்துள்ளன. ஆனால், இவ்விரு உருவங்களும் சதாசிவ மகாராயரும் சின்ன பொம்மி நாயக்கரும் ஆவார்கள் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**இரண்டாம் நிலை கோபுரம்**

இராஜ கோபுரத்தை அடுத்து வருவது இரண்டாவது கோபுரமாகும். உட்பிர காரத்தின் நடுவே பிரதான கோயிலும் அதற்கு முன்பாக நடராஜர் மண்டபமும் அமைந்துள்ளன. மேல் திருச்சுற்று மண்ட பத்தில், செல்வ விநாயகர், வெங்கடேசப் பெருமாள், சுப்ரமணியர் ஆகியோருக்கு தனித் தனி சன்னதிகள் அமைந்துள்ளன. வடமேற்கு முனையில் அன்னை அகிலாண்டேஸ்வரி சன்னதி அமைந்துள்ளது. மண்டபம் மற்றும் தூண்கள் 13, 14 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவை எனக் கூறப்படுகிறது.

அன்னை அகிலாண்டேஸ்வரி சன்னதியின் பின்புறம் அலைமகள், மலைமகள் சன்னதிகள் உள்ளன. வடகிழக்கு மூலையில் சிறிய யாகசாலை மண்டபம், கிணற்றுடன் கூடிய மடப்பள்ளி அமைந்துள்ளன.

**மூன்று நிலவறைகள்**

பிரகாரத்தின் வடமேற்கு மூலையில், கிணற்றின் உள்ளேயும், நடராஜர் மண்டபத்தின் கருவறையின் கீழேயும், உள்பிரகாரத்தின் ஈசான மூலையிலும் என, மூன்று நிலவறைகள் அமைந்துள்ளது, இக்கோயிலின் தனிச் சிறப்பாகும். இவை சுரங்கப் பாதைகள் என்று கூறப்பட்டாலும், உண்மையில் இவை ஆபத்துக் காலங்களில் அரிய பொருட்களை பாதுகாக்கும் நிலவறைகள் என்பது, ஆய்வாளர்களின் முடிவு.

**உண்ணாழிகை**

நடராஜர் மண்டபத்தை அடுத்துள்ள சுவாமி சன்னதியில் துவார பாலகர்கள் இருவரும், விஜயநகர நாயக்கர் காலத்தைச் சேர்ந்தவை. மகா மண்டபம் அர்த்த மண்டபத்தை தாண்டினால் நமக்கு காட்சி



தருபவர் மூலவர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர்.

**ஜலகண்டேஸ்வரரான ஜுவர கண்டேஸ்வர்**

தற்போது ஜலகண்டேஸ்வரர் என்று அழைக்கப்படும் இறைவனின் பழங்கால பெயர், ஜுவரகண்டேஸ்வரர் ஆகும். இதன் பொருள் ஜுரத்தை அழிக்கும் ஈசன் என்பதாகும். காஞ்சிபுரத்தில் இதே பெயர் கொண்ட பல்லவர் காலத்து கோயில் ஒன்று உள்ளது நினைவுகூறத் தக்கது. கி.பி.1566 ஆம் ஆண்டு கல்வெட்டுக்களின் மூலம் இதனை அறிய முடிகிறது.

'ஜுவரகண்டேஸ்வரர்' என்ற பெயர் காலப் போக்கில் மருவி 'ஜலகண்டேஸ்வரர்' என்ற பெயரே நிலைத்து விட்டது.

**கல்யாண மண்டபம்**

வெளிப்பிரகாரத்தின் முதல் கோபுரத்தை அடுத்து, தென்மேற்கு மூலையில் அமைந் துள்ள மண்டபமே கல்யாண மண்டபம் ஆகும். தமிழகத்தில் அமைந்துள்ள ஆறு அழகிய மண்டபங்களான நெல்லை, கிருஷ்ணாபுரம், சுசீந்தரம், பேரூர் ஆகிய வற்றின் வரிசையில் வேலூரும் அடங்கும்.

இதன் சிறப்பினை மேலைநாட்டு அறிஞர் 'பெர்சி ப்ரெவுன்' இது ஒரு தனி அருங்காட்சியம் என்று புகழ்கிறார். 'லாங்கர்ஸ்ட்' இதனை தென்னிந்தியாவின் மிகச் சிறந்த மண்டபம் என்று குறிப்பிடுகிறார். சிற்பக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு இம்மண்டபம் என்றால் அது சற்றும் மிகையல்ல. 40 தூண்களை கொண்ட இம்மண்டபத்தில் அழகிய புடைப்புச் சிற்பங்கள் எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஹொய்சல கால (கி.பி.1173) சிற்ப நுணுக்கங்களுக்கு இணையாக இம்மண்டபம்

அமைக்கப்பட்டுள்ளது. பார்க்கப் பார்க்க பரவசமூட்டும்.

புடைப்புச் சிற்பங்கள், குடவரை சிற்பங்கள், சாலைகள், பூத கணங்கள் என அரிய படைப்பின் தொகுப்பாக இம்மண்டபம் விளங்குகிறது

பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் வசந்த மண்டபம், அதன் அடியில் நிலவறையும் நீராழி மண்டபமும் அமைந்துள்ளன.

**சிம்மக்கிணறு**

விரிஞ்சிபுரம் கெங்கைகொண்ட சோழபுரத்திற்கு இணையான சிம்மக் கிணறு ஒன்றும் இங்கு காணப்படுகிறது.

**கோயில் விழாக்கள்**

இக்கோயிலில் சிவாலயங்களில் நடைபெறும் அனைத்து விழாக்களுமே நடைபெற்று வருகின்றன. மூன்று கால பூஜை தினமும் மேற்கொள்ளப்படுகிறது. நாயன் மார்களின் ஜென்ம நட்சத்திர விழாக்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இக்கோவில் காலை 6.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையிலும் மாலை 3.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

**இறைவன் வெளிப்பட்ட கதை**

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வேலூரில் அத்திரி முனிவரால் வழிபட்டு வந்த சிவலிங்கம் பாலாற்று வெள்ளத்தினால் மண்மேடு இட்டு மூடப்பட்டிருந்தது. அங்கே பசுக்களை வளர்த்து ஆட்சி செய்து வந்த பொம்மிரெட்டியின் பசுக்களில் ஒன்று தினந்தோறும் வற்றிய மடியுடன் வீடு திரும்பியது. அதன் காரணத்தை அறிய முற்பட்டபோது பாம்பு புற்று ஒன்றின் மீது பசு நிற்க, ஐந்து தலை நாகம் காம்பின் வழியே பாலை உறிஞ்சிக் குடித்துக் கொண்டு



இருந்தது.

இதன் காரணம் புரியாத பொம்மி ரெட்டியின் கனவில் இறைவன் தோன்றி தன்னிடத்தில் கோயிலையும் கோட்டையையும் அமைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அக்கோயிலை கட்ட தேவையான புதையலையும் அவருக்கு காட்டினார். அதன் மூலம் கோயிலும் கோட்டையும் உருவானது என்பது புராணக்கதை.

**பிரிந்தாரை சேர்த்து வைக்கும் ஆலயம்**

இக்கோயிலை கட்டும்போது மன்னனும், தலைமை சிற்பியும் கட்டட ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்விடம் வந்த இளைய சிற்பி ஒருவர் அக்கோயிலுக்கு வந்து இங்கு உள்ள தூணில் தேரை உள்ளதால் கட்டுமானத்தில் பிழை உள்ளது என்று கூற, அதை உறுதிப்படுத்த ஒவ்வொரு தூணையும் சோதித்தபோது ஒரு தூணில் மட்டும் குறை கண்டறியப்பட்டது.

தன் தவறை உணர்ந்த மூத்த சிற்பி தன் கையை வெட்டிக் கொண்டதாகவும் முடிவில் இளைய சிற்பி இளம் வயதில் காணாமல் போன புதல்வன் என்பதும் தெரிய வந்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் இந்த இறைவன் பிரிந்தாரை சேர்த்து வைத்தவர் என்றும் புகழப்படுகிறார்.

**அனைவருக்கும் ஏற்ற தலம்**

ஆன்மீக சுற்றுலா வரும் அன்பர்களுக்கும் இன்ப சுற்றுலா வரும் பொதுமக்களுக்கும் வரலாற்றினை அறிய விரும்பும் ஆய்வாளர்களுக்கும், கலையை ரசிக்க விரும்பும் கலைஞர்களுக்கும், ஆடிப் பாட விரும்பும் குழந்தைகளுக்கும் அதிசயிக்க விரும்பும் பெரியவர்களுக்கும் என, அனைத்து தரப்பு பிரிவினருக்கும் ஏற்ற இடமாக விளங்குவது வேலூர் கோட்டையும் கோயிலும் ஆகும்.

வாழ்க்கையில் ஒருமுறையேனும் வந்து செல்ல வேண்டிய இடம் வேலூர் என்றால் அது மிகையல்ல, உண்மை... உண்மை...

**கட்டுரை - பனையபுரம் அதியமான்.**




சென்னை புரசைவாக்கம் அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயிலில் 15.8.09 அன்று நடைபெற்ற சுதந்திர தினவிழா சிறப்பு வழிபாடு பொது விருந்து நிகழ்ச்சியில் மாண்மிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு ஆர்க்காடு. நா.வீராசாமி அவர்களும் முக்கிய பிரமுகர்களும், பொது மக்கள்0-- கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 15-8-2009 அன்று நடைபெற்ற சுதந்திரத் திருநாள் சிறப்பு வழிபாடு பொது விருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா.ஆவுடையப்பன் அவர்கள், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு.க.முத்துசாமி இ.ஆ.ப அவர்கள், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.வி. சேகர் அவர்கள், அறங்காவலர் கள் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலின் நூலகத்தினை 22.07.2009 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர் பெரியகருப்பன் அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் இ.ஆ.ப அவர்கள், முக்கிய பிரமுகர்கள் அறங்கா வலர்கள், அலுவலர்கள் மற்றும் பொதுமக் கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






# அருள்மிகு சிவலோகநாதர் திருப்புன்கூர்

**தெ**ன் இந்தியாவில் குறிப்பாக தமிழகம் திருக்கோயில்களுக்கு சிறப்புப் பெற்றதாகும். அந்த வரிசையில் திருப்புன்கூர் திரு சிவலோகநாதர் திருக்கோயில் தனித் தன்மையுடையது. திருப்புன்கூர் என்னும் இத்தலம் வைத்தீஸ்வரன் கோயில் என்னும் தலத்தின் மேற்கே சுமார் ஒன்றரைக் கல் தொலைவில் அமைந்துள்ளது. தல விருட்சம் புங்கு. இதனால் திருப்புன்கூர் எனப் பெயர் பெற்றது. இறைவன் திருநாமம் சிவலோக நாதர், இறைவி சொக்கநாயகி. திருஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல் பெற்றது.

**கோயிலின் அமைப்பு**

ராஜகோபுரத்தை கடந்த உடன் பிரகாரத்தின் தென்கிழக்கில் கலை அம்சம் பொருந்தி நந்தனாரின் திருவுருவம் பொறித்த கோயில் உள்ளது. அடுத்து நந்தி மண்டபம், உருவத்தில் பெரிய நந்தி, சிற்ப வேலைப்பாடுகளும், கலை நுணுக்கங்களும், கலை அம்சமும் பொருந்தியது. 15 அடி நீளம், 7அடி அகலம், 7 அடி உயரமும் உடையது. சுவாமி நந்தனாருக்காக நந்தியைச் சுமார் இரண்டு அடி வடபால் நகரச் செய்து




காட்சி அருளியது. தென் பிரகாரத்தில் வேண்டுவோர்க்கு வேண்டுவன எல்லாம் கொடுத்தருளும் குளம் வெட்டிய வினாயகர் கோயில் கொண்டுள்ளார், வட பிரகாரத்தில் முருகப் பெருமானுக்கு கோயிலும், புனிதமான புங்கு மரமும், சுவாமி பிரம்மாவுக்கு ஐந்து முகமாக காட்சி அருளிய பஞ்சலிங்க மேடையும், பிரம்ம லிங்கத்திற்கு சிறிய கோயிலும் உள்ளன. ஆலயத்தின் மேல்புரம் நந்தனாரால் வெட்டப்பட்ட திருக்குளத்திற்கு செல்லும் வாசலில் சிறிய கோபுரமும் உள்ளது.

இக்கோயிலில் இருக்கும் பெரிய அளவிலான சோமாஸ்கந்தர் அம்பாளுடன் காட்சியளிப்பது மிகவும் சிறப்புடையது.

**நந்தன் சரித்திரமும் பூசித்ததும்**

கி.பி. 5–ம் நூற்றாண்டிற்கு முன்பு தஞ்சாவூர் மாவட்டத்தில் திருப்புன்கூர் என்னும் இத்தலத்திற்கு மேற்கே சுமார் மூன்று மைல் தொலைவில் தற்போது மேல் ஆதனூர் என்றழைக்கப்படும் ஊரில் விவசாய குடும்பத்தில் பஞ்சம ஜாதியில் நந்தனார் தோன்றினார். இளம் பருவத்திலேயே அந்த ஊரிலுள்ள பிராமணர்களுடைய பழக்க வழக்கங் களையும், ஆண்டவனுக்கு அவர்கள் செய்து வருகின்ற வழிபாட்டு முறைகளையும் கண்டு வியப்புற்று தானும் அதே வழியைக் கடைப்பிடிக்க எண்ணினார். தன் வகுப்பு மக்களையும், அதே வழிக்கு இழுத்துச் செல்ல முற்பட்டார். உயர்ந்த குலத்தில் பிறந்தோர் நந்தனாருடைய எண்ணத்தையும், செய்கையையும் புரட்சிகரமானதென்று கருதினார்கள். நந்தனார் தன் வாழ்க்கை முறையையே மாற்றினார். சிவ பக்தியில் சிறந்து விளங்கினார். சிவாலயங்களை வணங்கி அவ்வாலயங்களின் மத்தளம் முதலியவைகளுக்கு வாரும், தோலும், சுவாமிக்கு கோரோசனையும் சேர்த்து கொடுத்து வந்தார்.

அவர் பல நாட்கள் திருப்புன்கூருக்கு திருசிவலோகநாதரை தரிசிக்கும் பொருட்டு வந்து, தான் பஞ்சம ஜாதியினராதலால் 



தேரடியில் நின்றார். ஆலயத்தில் இறைவனை மறைத்துக் கொண்டு மலை போல நந்தி ஒன்று இருக்கக் கண்டு இறைவனை தரிசிக்க முடியாமல் வருந்தி சிவலோகநாதரைப் பார்த்துப் பாடினார்.

**"சிவலோநாதன் திருச்சந்திதானம்**
**மலையாகிய நந்தி மறைத்திடு திங்கே**
**பலகாலஞ்செய்த பாழ்வினை குவித்து**
**மலையாகி இப்படி மறைத்ததோ**
**வென்றார்"**

**"வழிமறைத்திருக்குதே மலைபோல**
**ஒரு மாடு படுத்திருக்குதே.**
**"பாவிப் பறையனிந்த வூரில்வந்து மிவன்**
**பாவந் தீரேனோ உன்தன்**
**பாதத்தில் சேரேனோ ஏறோனோ**
**சிவலோகநாதா மாடு."**
**"தேரடியில் நின்று தரிசித்தாலும் போதும்**
**கோவிலுள்வர மாட்டேனே ஐயே**

**ஓரடி விலகினால் போது மிங்கே நின்று**
**உற்றுப் பார்க்கச் சற்றே**
**விலகாதோ மாடு."**

இப்படி நந்தனார் வருந்தும்போது சுவாமிநந்தனார்மீது இரங்கி நந்தியை விலகச் சொன்னார்.

நந்தியும் விலகியது. நந்தனார் சிவலோகநாதரைக் கண்டார். ஆனந்தக் கூத்தாடினார். இப்படி நாள்தோறும் சிவலோகநாதரை வணங்கிச் செல்லும் போது கோவிலின் மேல்புரம் இருக்கும் இடப தீர்த்தத்தை வெட்டி சீர்படுத்த நினைத்தார். தனக்கு உதவி செய்ய யாரும் இல்லாததினால் இறைவனை தியானித்தார். சிவலோகநாதர் நந்தனார் பக்திக்கு மகிழ்ந்து வினாயகரை அழைத்து நந்தனாருக்கு உதவி செய்யும்படி அனுப்பினார். கரிமுகனும் தட்டு மண் வெட்டியுடன் நந்தனாரிடம் வந்தார்.

குளத்தை தானே வெட்டுவதாக விநாயகர் ஒப்புக் கொண்டு தன் பூத கணங்களை விட்டு சிறிது நேரத்தில் குளத்தை வெட்டி முடித்தார்.

எல்லாம் வல்ல சிவன் செயலென்று நந்தனார் மகிழ்ச்சியுற்று கோவிலை வலம் வந்து தன்னுடன் வந்த பதினொரு பேர்களுடன் ஆதனூர் வந்து சேர்ந்தார். பின்னர் தில்லைக்குச் செல்ல விருப்பம் கொண்டு "நாளைப் போவேன்" "நாளைப் போவேன்" என்றிருந்தாராதலால் இவருக்குத் ''திருநாளைப்போவார்'' என்று பெயருண்டாயிற்று.

**ஏயர்கோன் கலிக்காம நாயனார்**

இத்திருப்புன்கூர் தலத்துக்கு சமீபத்தில் பெருமங்கலம் என்னும் ஊரில் வேளாளர் குலத்திலே எயர்கோன் குடியிலே அவதரித்து சிவ பக்தியிற் சிறந்து சிவலோகநாதரை தினமும் தரிசித்து வாழ்ந்து வந்த கலிக்கமா நாயனாருக்கு இறைவன் திருவருள் புரிந்த திருத்தலமும் இதுவாகும்.

ஆகவே, இக்கரிஞ்சாரண்யம் என்னும் திருப்புன்கூர் தலத்தின் மேன்மையைச் சொல்லச் சொல்ல விரியும் இவ்வூரைச் சுற்றிலும் இந்திராதி தேவர்களால் இயற்றப் பட்ட தீர்த்தங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்ட தீர்த்தங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்ட இலிங்கங்களும் அநேகம் உண்டு. ஒரு நாள் இவ்வூரிலுள்ள இடபதீர்த்தத்தில் குளித்துவிட்டு ஸ்ரீ சிவலோகநாதரையும், ஸ்ரீ சௌந்தர நாயகியையும் தரிசித்து ஓர் இரவு இத்தலத்தில் தங்குவோர் இகபர சாம்ராச்யங்களைப் பெற்று ஆரோக்ய திடகாத்திர சரீர முடையவர்களாய்ப் புத்ர பௌத்ர களத்திர சம்பத்துக்களுடன் வாழ்வார்கள் என்று சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளுக்குச் சொன்னார்.

இத்தலத்தில் விளங்கும் சுயம்பிரகாச லிங்கமாகிய ஸ்ரீ சிவலோகேசனை பிரம்மாதி தேவர்களும் பூசித்து அவரவர்க் குற்ற சாபங்களை நீக்கிக் கொண்டனராதலால் மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் தரிசித்து நற்கதி அடைய வேண்டி ஸ்ரீ சௌந்தரநாயகி அம்மையோடு வீற்றிருக்கிறார்.

**சிற்சபேச சோழன் பூசித்தது**

சோழ தேசத்தை மநுநெறி தவறாது அரசு புரிந்தவர்களுள் மிகவும் பிரசித்தி பெற்ற வீரவிக்கிரம சோழன் என்பவன் வெகுநாள் வரையிலும் மகப்பேறில்லாமல் வருந்தி அநேக யாகாதிகள் இயற்றியும், விரதங்கள் அனுஷ்டித்தும், ஆலய பூஜைகள் புரிந்தும் பலன் காணாத நிலையில் பெரியோர்களால் இத்திருப்புன்கூர் மகிமையைக் கேள்வியுற்று தமது பத்தினி பரிவாரங்கள் சகிதனாய்க் கரிஞ்சாரண்ய க்ஷேத்திரம் வந்து இடப தீர்த்தத்தில் தீர்த்தமாடி சிவலோகநாதனையும் சௌந்திரநாயகியையும் தரிசித்து மகப்பேறு வேண்ட அவர் கிருபாகடாட்சத்தினால் நல்ல புத்திரனைப் பெற்று அவனுக்கு சிற்சபா நடேசனென்று பெயரிட்டு மனமகிழ்ந்து தமது நகர்க்கேகினார்.

பின்னர் சிற்சபா நடேசருக்கு தக்க வயது வந்தவுடன் முடிசூட்டி வைத்துப் பரகதியடைந்தான்.

சிற்சபா நடேச சோழன் செங்கோல் செலுத்தி வரும் நாளில் தன் தந்தைக்குச் சந்தான வரமளித்த சிவலோகேசர் மகிமையைக் கேள்வியுற்று இந்தத் திருப்புன்கூர் தலம் வந்து இடப தீர்த்தமாடி சிவலோக நாதரையும், சௌந்தரநாயகியையும் வலம் வந்து தரிசித்தான். அப்பொழுது

அவ்வாலயத்தில் பணி செய்து வந்த சௌந்தரம் என்னும் தாசியின் அழகைக் கண்டு மயங்கி அவளைத் தொடர்ந்து அவள் பதிக்கேகி தன் காதலைத் தெரிவித்து ஏராளமான பொருள் அளித்து அவளுடனேயே இருந்து வந்தான். ஒரு நிமிஷமேனும் அவளைப் பிரிந்திருக்க சகியான்.

இப்படி இருக்கும் நாளில் அரசன் திருவாரூர் தியாகேசனைத் தரிசிக்க எண்ணினான். ஆனால், சௌந்தரம் என்னும் தாசியைப் பிரிய மனமில்லாமல் அவளைக் கூடவே அழைத்தான். அவள் ஒரு நாளாயினும் சிவலோகேசன் தரிசனம் இல்லாதிருக்க மாட்டேன்; மற்ற தலத்தில் அள்ளிக் கொடுப்பதிலும் இத்தலத்திற் கிள்ளிக் கொடுப்பதே மேலென்று எண்ணுவேன் என்றாள்.

அரசனும் மனம் கலங்கி ஒருவாறு தேறி தென்றிசை நோக்கி தன் நகரம் செல்லலானான். அரசன் சென்றவுடன்



அத்தாசி சௌந்தரம் வீட்டிற்குள் சென்று பார்க்க அரசன் தனக்குக் கொடுத்த ஆபரணங்களைக் காணாமற் கலங்கி அரசனைப் பின் தொடர்ந்து சென்று தன் ஆபரணங்களைக் கொடுக்கும்படி கேட்டாள். அரசன் காரணமறியாது தனக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாதென்று கூறியும், தாசி விடாது அவனைச் சிவலோக நாதர் சந்நதியிலிருக்கும் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அவர் சந்நிதியில் பிரமாணம் செய்து தர வேண்டுமென்று சொல்ல, மன்னனும், சம்மதித்து திருப்புன்கூர் வந்தான்.

தீர்த்த முழுவதும் இரத்த மயமாய் இருக்கக் கண்டு அதில் மூழ்க மனம் சகியாதவனாய் பலி பீடத்தருகில் நின்று பிரமாணம் செய்கையில், அவ்விடமிருந்த துவாரபாலகர்களுள் ஒருவன் பாம்பாக மாறினான்.

மற்றொருவன் கருடனாக மாறி அப்பாம்பை எடுத்து சோழராஜன் கழுத்திட்டான். அரசன் நடுங்கி சிவலோகேசனை தோத்தரித்து தனக்குற்ற பழியை நீக்கி பாம்பை விலக்கினால் வேண்டிய பொருள் பூமி அளிப்பதாகச் சொன்னவுடன் அந்த சர்ப்பமானது மறைந்தது.

அரசனும் மகிழ்ந்து சிவலோகநாதருக்கும் சௌந்தரநாயகிக்கும் அளவில்லாத ஆபரணங்களும் நித்திய நைவேத்திய படிக்கட்டளைகளுக்காக பூமியும் கொடுத்து நந்தவனங்கள் ஏற்படுத்திப் பூசைகள் நாகப் பிரதிஷ்டை முதலியன செய்வித்துத் தன்னகருக்கு ஏகினான் என்ற வரலாறும் உண்டு.

**தினசரி பூஜா காலங்கள்**

தினசரி ஐந்து காலங்களில் பூஜை நடைபெறும்.

1. பால் நைவேத்தியம்.
2. காலை சந்தி
3. உச்சி காலம்
4. சாயரட்சை
5. அர்த்த ஜாமம்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த திருப்புன்கூர் சிவலோகநாதரை நாமும் தரிசித்து நற்பேரு பெறுவோம் வாரீர்.

# உலகம் உய்ய உதித்த உடையவர்

–சென்ற இதழ் தொடர்ச்சி.

**கா**ஞ்சிபுரத்திற்கு வந்த இராமனுஜர் காஞ்சி மாநகரில் அருள் ஆட்சி புரியும் அருளாளப் பெருமானையும், பெருமாளுக்கு ஆலவட்ட கைங்கரியம் (விசிறி வீசும்) செய்யும் திருக்கச்சி நம்பிகளின் திருவடிகளிலும் விழுந்து வணங்கி பின் அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு, உயர்ந்த பெருமையுடைய ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்த இராமனுஜரை ஸ்ரீரங்கத்தில் வாழும் அடியார்கள் அவரை வணங்கி வரவேற்றனர். அதன் பின்னர் ராமானுஜர் நம் பெருமாளை வணங்க திருக்கோயில் சென்று பெருமாளின் தாமரைத் திருவடிகளை வணங்கி நின்றார். அவ்வாறு நின்ற ராமானுஜரை நம்பெருமாள் தம்முடைய தாமரைக் கண்களால் அருள் பாலித்து "குற்றமற்ற எதிராஜரே நமது பெரியவடக்கு வீடாகிய திருவேங்கட மலைக்கு சென்று வணங்கி வந்தாய்போலும்" என்று செங்கனிவாய் பெருமாள் கேட்கவும், இராமானுஜர் பெருமாளைப் பார்த்து "தேவர்கள் தேவனே பொம்மலாட்டத்தில் பொய்யான பொம்மைகளை வைத்து இயக்கும் சூத்திரதாரி போல் நீர் இருக்கிறீர். நான் இயந்திரம் என் செய்கை உள்ளதோ" தேவரீர் அருளியபடியெல்லாம் அருள் பெற்றேன். என்னால் ஒன்றும் இல்லை. விஷத்தை விடவும் கொடிய ஐந்து புலன்களையும் வஞ்சக மனத்தினையும், உம்முடைய திருவடிக்கே நான் பதித்தேன் என்றால் அது உம்முடைய அருள் செயலே



தவிர என்னால் ஒன்றுமில்லை என பணிவுடன் வணங்கி நின்றார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் உறையூரை தலைநகராகக் கொண்டு "அகளங்கன்" என்ற மன்னர் ஆண்டு வந்தார். அம்மன்னனுக்கு சேவை செய்து வந்தவர்களில் உறங்காவில்லிதாசர் ஒருவர். அவர் அரசனிடத்தில் செல்லும்போதும், மற்ற இடங்களுக்குச் செல்லும்போதும், தொழில் செய்யும் இடத்திலும் உறங்காவில்லிதாசர் தன் மனைவியை உடன்

**பெ.ராமநாதபிள்ளை, செயல் அலுவலர், திருமூர்த்திமலை, உடுமலை வட்டம்.**

அழைத்துச் செல்வார். அவ்வாறு செல்வதில் ஒருநாள் உறையூரில் இருந்து திருவெள்ளறைக்கு மத்தியான வேளையிலே காவிரி நதி மணலில் நடந்து போனார். அவ்வாறு நடந்து செல்லும்போது மணலின் சூடு தாங்காமல் அந்த அம்மாளின் காலடி சிவந்து போக உறங்காவில்லிதாசர் தன்னுடைய மேல் ஆடையை கீழே போட்டு "பெண்ணே இதில் நடப்பாய் என்று சொல்ல, அந்த பெண் அதில் நடந்தார்." இச்செயலை காவிரி நதிக்கு வந்திருந்த இராமானுஜர் இந்த புதுமையான செயலைப் பார்த்து இதனைக் காண்பீர்களாக என்று தன் அடியார்களிடம் சொல்லி அவர்கள் இருவரையும் தன் பக்கத்தில் அழைத்து வரச் சொன்னார். அவ்வாறு அந்த உறங்காவில்லிதாசரும் அவர் மனைவியும் அருகில் வந்ததும், அந்த உறங்காவில்லிதாசரைப் பார்த்து நீர் உடுத்திய ஆடையை அவிழ்த்து அந்த பெண் நடப்பதற்காக காவிரி சுடுமணலில் அதை விரித்து வைத்தீரோ என்று கேட்டுக் கொண்டு நீர் எங்கிருந்து வருகிறீர் என்று கேட்டார்.

அதற்கு அவர் என் சொந்த ஊர் திருவெள்ளறை. நான் இப்போது உறையூரில் அரசாட்சி செய்யும் அரசனிடம் சென்று அவரை வணங்கி விட்டு ஊர் திரும்புகிறேன் என்றார். உடனே இராமானுஜர் இந்த பெண்ணை அழைத்து வந்ததின் காரணம் என்ன என்று கேட்டார். அதற்கு உறங்காவில்லிதாசர் இப்பெண் மிகவும் அழகுடையவள். இவள் கண்ணழகிலே நான் மயங்கி இருப்பதால் இவளை விட்டு நான் ஒருபோதும் பிரிய மாட்டேன் என்றும், எங்கு சென்றாலும் உடன் அழைத்துச் செல்வேன் என்றும் பதில் கூறினார்.

இதனைக் கேட்டதும் இராமானுஜர் இதை விடவும் அழகான கண்களைக் காட்டினால், இவள் மேல் உள்ள மயக்கம் தீர்ந்துவிடுமா எனக் கேட்டார். அதைக் கேட்ட உறங்காவில்லிதாசர் இக்கண்களை விடவும் வேறு அழகான கண்களை நான் இதுவரை பார்த்ததில்லை என்றார். உடனே இராமானுஜர் இதோ நான் காண்பிக்கிறேன் என்று ஸ்ரீரங்கப் பெருமாளின் சன்னதிக்கு அழைத்துச் சென்றார்.

**"வந்தார் காட்டு கின்றேன்நான் வருதி**
**என்ன உடன் கொடு போய்**
**இந்தா காண்டி எனஅரங்கர் இணையில்**
**இணைத்தா மரைக்கண்ணைச்**
**சிந்தா அறிவின் மெய்ஞ்ஞானி திருந்தக்**
**காட்டக் கண்டிறைஞ்சி**
**அந்தோ இதனுக் கவள்கண்கள்**
**இணையாங்**
**கொல்லென்று அகம்குழைந்தே".**

ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் –588.

பெருமாளுடைய கண் அழகைப் பார்த்ததும் தன்னை மறந்து நின்ற உறங்காவில்லிதாசரிடம் இராமானுஜர் "அந்த பெண்ணின் கண்ணோ அல்லது திருவரங்கத்து பெருமானின் கண்ணோ இதில் எது சிறப்புமிக்கது சொல்வீராக," என்று கேட்டார். உடனே உறங்காவில்லிதாசர் இராமானுஜர் திருவடிகளில் விழுந்து வணங்கி இப்பெண்ணின் கண்கள் திருவரங்கத்து பெருமாளின் கண்களுக்கு ஈடாகாது என உண்மையை ஒத்துக் கொண்டு, உத்தமரே என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என மனம் உருகி வேண்டினார். அப்பொழுது இராமானுஜர் அவ்விருவரையும், ஏற்றுக் கொண்டு, உம்மை எம்மோடு சேர்த்துக் கொள்கிறோம். நீர் அழகிய ஸ்ரீரங்கத்தில் இருப்பீராக என வாழ்த்தினார். மடத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு மந்திர உபதேசம் செய்து நீர் முன்போல் அரசனுக்கு சேவை செய்யக் கடவீர் என கூறினார். அதன்படியே ஸ்ரீரங்கத்தில் குடியிருந்து கொண்டு மன்னனுக்கு சேவை செய்து கொண்டும் இராமானுஜரின் திருவடிகளை மனதில் வைத்தும் வாழ்ந்து வந்தார்.

அப்படி வாழ்ந்து வரும் நாளில் உறங்காவில்லிதாசர் தன் மருமகன்களாகிய வண்டரையும் சொண்டரையும் இராமானுஜரிடம் அழைத்து வந்து

அவருடைய செல்வங்களை எல்லாம் இராமானுஜரிடம் காணிக்கையாக செலுத்தினார்கள். துளியும் ஆசை இல்லாத இராமானுஜர் அவ்வாறு அன்போடு கொடுத்த காணிக்கைகளை வேண்டாம் என்று விலக்காமல் ஏற்றுக் கொண்டு திருமால் அடியார்கள் உண்பதற்கு பயன்படுத்திக் கொண்டார். இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் தினமும் காவிரியில் நீராட போகும் பொழுது உயர்ந்த குலத்தில் பிறந்த அந்தணர்களின் கையைப் பிடித்துக் கொண்டு செல்லும் இராமானுஜர் நீராடி திரும்பி வரும்பொழுது உறங்காவில்லிதாசரின் கையைப் பிடித்துக் கொண்டே எழுந்தருளுவார்.

**"ஓதிய பல நாள் இந்த ஒழுங்கவண்**
**நிகழக் கண்டு**
**சாதியில் தலைமை யாய தலையை**
**அந்தணர்கள் எல்லாம்**
**நீதி இவ்வுலகுக் கெல்லாம் நிறுத்திய**
**எந்தை யார்க்கும்**
**வேதியர் பரிசம் தன்னில் மிக்கதோ**
**உறங்கா வில்லி"**

**– ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–601.**

இவ்வாறு செய்து வருவதை கண்டு அந்தணர்கள் எல்லாரும் "நீதியை நிலைநாட்ட வந்த இராமானுஜருக்கு அந்தணர்களுடைய ஸ்பரிசத்தை விடவும் உங்காவில்லிதாசரின் ஸ்பரிசம் உயர்ந்ததாகி விட்டதோ" என்று எண்ணிக் கொண்டு நேரில் அவரிடம் கேட்பதற்கு பயந்து கொண்டு இருக்கும் நாளில் கந்தாடை முதலியாண்டான் இராமானுஜர் முன் வந்து வணங்கி நின்றார்.

அவரைப் பார்த்த இராமானுஜர் "முதலியாண்டரே நீர் என்னிடம் ஏதோ கேட்க விரும்புவது போல் தெரிகிறதே என்று வினாவினார்" உடனே முதலியாண்டார் "திருமாலின் உயிர் போன்றவரே நீர் நீராடுவதற்கு எழுந்தருளி திரும்பி வரும்பொழுது பக்தியுடைய அடியார்கள் முன்னும் பின்னும் வர நீர் உறங்காவில்லிதாசரின் கையைப் பிடித்துக் கொண்டு வர காரணம் என்ன என்று கேட்டார். இராமானுஜர் முதலியாண்டாருக்கு உறங்காவில்லிதாசருடைய பெருமைகளை எடுத்துக்கூறி முதலியாண்டாரின் மனம் தெளியும்படி விளக்கம் சொன்னார்.

**"அத்திறத்தைக் கேட்டருளி ஆசி லாத**
**உடையவரும்**
**பத்து வார்த்தை எடுத்தங்ஙன்**
**பழுதி லாத ஆண்டான் சீர்ச்**
**சித்தம் தெளியக் கட்டுரைத்தார்**
**சிலநாள் அவணம் சென்றளவில்**
**ஒத்தில் உலகை ஆள்மன்னன் உறையூர்**
**நின்றும் ஒருகானில்".**

**ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–606.**

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் உறையூரை ஆண்டு வந்த மன்னர் உறங்காவில்லிதாசருடனும் அவர் மருமகன்கள் வண்டர், சொண்டருடனும் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். அவ்வாறு காட்டுக்கு வேட்டையாட செல்லும் வழியில் சமணருடைய கோயில்கள் இருப்பதைக் கண்ட மன்னர் அந்த உண்மையை மறைத்து வண்டர், சொண்டர்களை அழைத்து வண்டரே, சொண்டரே இது பெருமாள் கோயில் ஆகும். இதை வணங்குவீர்களாக என்று சொல்லவும் வண்டரும் சொண்டரும் பூமியில் விழுந்து வணங்கினார்கள்.

சமணர்களின் கோயிலை திருமால் அடியார்கள் வணங்கினர் என்று அவர் விழுந்து சிரிக்கவும் அதை அறிந்த வண்டரும், சொண்டரும் முற்செய்த பாவத்தின் விளைவுதான் என்று எண்ணி மயங்கி விழுந்தார்கள்.

அவர்கள் மயங்கி கிடந்த செய்தியை அறிந்த மன்னர் உறங்காவில்லிதாசருக்கு

தெரிவிக்கவும் நடந்ததை எல்லாம் அறிந்த உறங்காவில்லிதாசர் திருமால் அடியாரின் திருவடி துசியினாலே அவர்களை விழித்தெழ செய்ய முடியும் என்று சொல்லி தன் காலினாலே அவர்கள் உடம்பை தடவினார். உடனே அவர்கள் மயக்கம் நீங்கி எழுந்தனர்.

இதைக் கண்ட அரசர் மிகவும் பயந்து அவர்களை வணங்கி குற்றமற்றவர்களே நீங்கள் திருவரங்கத்திற்கு சென்று அங்கேயே இருங்கள்.

உங்களுக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் மாதந்தோறும் கொடுத்து அனுப்புகிறேன் என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

உறங்காவில்லிதாசரும் அவர் மருமகன்கள் வண்டரும், சொண்டரும் ஸ்ரீரங்கத்திற்கு வந்து இராமானுஜரை சந்தித்து நடந்தவை எல்லாம் இராமானுஜர் அதிசயம் அடையும்படி எடுத்துச் சொல்லி அங்கே வாழ்ந்து வந்தார்கள்.

**"பொன்னரங் கத்தில் புகுந்(து) உடை யவர்க்கப்பூபதி பகர்ந்தமை அனைத்தும்**

**முன்னுற உரைத் தாங்(கு) உடையவர்**

**வியப்ப மூண்டநோய் அனைத்தையும் தப்பி**

**மன்னினார் மாதம் ஒன்றவன் செல்ல**

**மற்றையும் மாதத்தில் வரும்பொன்**

**மின்னுமா மௌலி வேந்தனும்**

**கொடுத்து விட்டனன்**

**விரைவினில் கொணர்ந்தார்".**

**– ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–615.**

அரசன் அறிவித்தபடியே செல்வத்தை எல்லாம் தன் தூதர் மூலம் ஸ்ரீரங்கத்தில் வாழும் உறங்காவில்லிதாசர் "நான் முன்பு அரசனிடம் பெற்ற பொருளை ஏற்றுக் கொண்டீர். இப்பொழுது ஏன் மறுக்கிறீர்" என்று கேட்டார்.

அதற்கு இராமானுஜர் "முன்பெல்லாம் நீங்கள் மூன்று பேரும் அரசன் சொன்ன வேலையை செய்து கொண்டு அந்த உழைப்பிலே பணம் பெற்றீர்" அதனால் அதை ஏற்றுக் கொண்டேன். இப்பொழுது இந்த பொருளுக்கும் உங்களுக்கும் என்ன சம்மந்தம் எனக் கேட்டார்.

உண்மையை உணர்ந்த அந்த மூவரும் குருநாதர் ஏற்காத பொருளை நாமும் ஏற்க மாட்டோம் என்று திருப்பி அனுப்பி விட்டார்கள்.

உண்மையை உணர்ந்த அரசன் நானும் உங்களின் குருநாதரை வணங்க வேண்டும் என்று சொல்ல அவர்களும் அம்மன்னரை இராமானுஜரிடம் அழைத்து வந்தனர். அரசரும் இராமானுஜரை வணங்கி நின்றார்.

இராமானுஜர் அரசரை நோக்கி நீர் எம்மிடத்தில் வந்துள்ள காரியம் என்ன என்று கேட்கவும், அரசன் "உமக்கு அடிமையாகி நல்வாழ்வு பெறும் பயனை எண்ணி வந்தேன் என்று கூறினார்.

இராமானுஜர் அவ்வரசனை ஏற்றுக் கொண்டு அவருக்கு அருள் செய்து பெருமாளுக்கு பல ஊர்களை மானியமாக கொடுக்கச் செய்து அடியார்கள் புகழும் வகையில் பெருமாளுக்கு நித்திய, வார, பட்ச, மாத, அயன, வருடாந்திர திருவிழாக்களையெல்லாம் இடைவிடாது நடக்கும்படி செய்து வந்தார்.

**"நன்றென அந்த அரசனுக்கு கிரங்கி**

**ஞானநா யகர் அருள் செய்து**

**வென்றிந் திகிரி அரங்கனுக் கந்த**

**வேந்தனைக் கொண்டுபல் லூர்கள்**

**அன்றுற விடுவித் தன்பர்கள் புகழ ஆசறு**

**திங்களும் நாளும்**

**ஒன்றிய திருவின் விழவறா வண்ணம்**

**ஓங்குசீர் அரங்கனுக் காக்கி".**


**– ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–622.**

**–தொடரும்.**

# சாவித்திரி

**சென்ற இதழ் தொடர்ச்சி**

**அ**ச்சுபதி "ஐயா! சுகதுக்கம் மாறி மாறி வரும். சுகமுந் துக்கமும் மனத்தைப் பொறுத்திருக்கின்றன; நல்ல நிச்சயத்துடன் உம்மிடம் வந்திருக்கிறோம். சினேகத்தால் வணங்குகிற என் விருப்பத்தை நீ கெடுக்கப் படாது; எனக்கு நீர் சம்பந்தத்திற்குத் தகுந் தவர்; உமக்கு நான் ஒத்தவன்; என்னுடைய மகளைச் சத்தியவானுக்கு மனைவியும் உமக்கு மருமகளுமாக ஏற்றுக் கொள்ளும்" என்று வேண்டினான் தியுமத் சேனன். "முந்தியே உம்முடைய சம்பந்தத்தை நான் விரும்பி இருந்தேன்; நான் இராஜ்யத்தை இழந்திருப்பதால் ஆலோசித்தேன்; நான் முன் விரும்பிய இந்த எண்ணம் இப்போது நிறைவேறட்டும். சாவித்திரி எனக்கு மருமகளாகட்டும்" என்றான்.



இரு மன்னர்களும் சேர்ந்து அங்குள்ள எல்லா முனிவர்களையும் வருவித்து, சாவித்திரிக்கும் சத்தியவானுக்கும் முறைப்படி விவாகத்தை நடத்தினார்கள். மகளுக்கு வேண்டிய சீதனங்களை மகிழ்ச்சியுடன் கொடுத்துவிட்டுச் சம்பந்தியிடம் விடைபெற்றுத் தனது நகர் சென்றான். சத்தியவான் சாவித்திரியை மனைவியாகக் கொண்டு மன மகிழ்ந்தான். மனத்தினால் விரும்பிய அக்கட்டழகனைக் கணவனாகப் பெற்றுச் சாவித்திரியும் மகிழ்ந்தாள். தந்தை சென்றபின் சாவித்திரி ஆபரணங்களைக் கழற்றிவிட்டு மரவுரி உடுத்திக்கொண்டாள். பணிவிடைகளாலும் குணங்களாலும் நட்பாலும் இந்திரியங்களுடைய அடக்கத்தாலும் வேண்டியவற்றைச் செய்வதாலும் மாமி மாமன் கணவன் இவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாள். மாமியாரையும் மாமனாரையும் அடக்கத்துடனும் இனிய சொல்லுடனும் உணவுகளைத் தந்து உபசரித்து வந்தாள். ஏகாந்த உபசாரத்தாலும் அன்புடன் உபசரிப்பதாலும் கணவனுக்கு மகிழ்ச்சியை விளைவித்தாள்.

உத்தம குணங்களுக்கு உறைவிடமாய் சாவித்திரி இவ்வண்ணம் மாமன் மாமிக்கும், கணவனுக்கும் பணிவிடை செய்து கொண்டு அந்த ஆச்சிரமத்தில் வசித்திருந்தாள். அவர்களுக்குத் தவஞ்செய்துகொண்டே சிலகாலம் சென்றது. வாட்டமடைகின்றவளும், அல்லும் பகலும் நின்று கொண்டேயிருப்பவளுமான சாவித்திரிக்கு நாரதரால் சொல்லப்பட்ட வாக்கியம் நெஞ்சத்தை விட்டு நீங்காது இருந்து வந்தது.

சின்னாட்களுக்குப் பின் ஒரு சமயத்தில் சத்தியவான் மரிக்க வேண்டிய காலம் வந்தது. நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிற சாவித்திரிக்கு நாட்கள் செல்லச் செல்ல, நாரதர் சொல்லை நினைத்து நினைத்து துன்பமும் பயமும் வளர்ந்துகொண்டே வந்தன. அவ்வுத்தமியானவள், நான்காவது நாள் பதி மரிக்கும் நாளென்று நன்றாக ஆலோசித்து, மூன்று நாட்களால் நிறைவேற்றத்தக்க ஒரு விரதத்தை மேற்கொண்டு இரவும் பகலும் நியமத்துடனிருந்தாள். திரயோதசியில் உபவாச ஆரம்பம்; பிரதமையில் பாரணை செய்கிறது; இந்த விரதத்தினால் கணவனுக்கு ஆயுள் வளருகிறது. தன் மருமகளாகிய சாவித்திரி உபவாசத்துடன் விரதமிருப்பதைக் கேட்டு சத்தியவானது பிதாவாகிய தியுமத்சேனன் மிகவும் மனவருத்தமுள்ளவனாக எழுந்திருந்து, சாவித்திரியை நோக்கி இனிமையாகக் கூறுவான்.

"ராஜகுமாரி! உன்னால் மிகக் கடுமையான இந்தக் காரியம் தொடங்கப்பட்டிருக்கிறது; மூன்று நாட்கள் உணவில்லாமல் இருப்பதென்பது ஒருவராலும் அனுஷ்டிக்க முடியாதது" என்றான். சாவித்திரி, "பிதாவே! நீங்கள் மனவருத்தப்படவேண்டாம்; நான் விரதத்தை இனிது முடிப்பேன்; காரியம் நிறைவேறுவதற்கு விடாமுயற்சியே காரணம்" என்றாள். தியுமத்சேனன், "அம்மா! நான் விரதத்தை விட்டுவிடு" என்று சொல்வதற்கு எவ்விதத்திலும் சக்தியுள்ளவன் அல்லேன்; என்னைப் போன்றவன் 'விரதத்தை முடிவு பெறச் செய்' என்கிற பொருத்தமான வசனத்தைச் சொல்ல வேண்டும்" என்று சொன்னான்.

பெரிய மனமுள்ள தியுமத்சேனன் இவ்வண்ணம் உரைத்துவிட்டுப் பேசாமலிருந்தான். நிற்கின்ற சாவித்திரியானவள் கட்டையானவள் போலக் காணப்பட்டாள். கணவன் மரணம் நாளை நேர்வதாக இருக்கையில் துக்கத்தையுடையவளும் நின்றுகொண்டே இருப்பவளுமான சாவித்திரிக்கு அந்த இரவானது மிக்க வருத்தத்துடன் சென்றது. கீர்த்தியுள்ளவளான சாவித்திரி நீராடித் தூய்மையாக இருந்துகொண்டு, "நாரத முனிவரால் குறிப்பிட்ட அந்தக் கணவனது மரண தினம் இன்று" என்று நிச்சயித்து, ஜ்வலிக்கின்ற அக்கினியில் ஓமஞ்செய்து, சூரியன் உதித்து நான்கு முழ உயரம் மேலே வந்தவுடன் காலைக் கடன்களைச் செய்து விரதத்தை முடித்து, பிறகு வயது முதிர்ந்த வர்களான எல்லா அந்தணர்களையும், மாமியாரையும், மாமனாரையும் முறையே வணங்கி, இரு கரங்களையும் குவித்துக் கொண்டு நியமத்துடன் நின்றாள். தபோவனத்தில் வசிக்கின்ற எல்லாத் தவசிகளும் சாவித்திரியின் பொருட்டு ஸௌமங்கல்யத்தைக் கொடுக்கக் கூடிய வையும் இதமானவையும் மங்களகர மானவையுமாகிய ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். தியான யோகத்தில் பற்றுள்ளவளும் தவமுள்ளவளுமான சாவித்திரி, "மனத்தினால் இவ்வண்மை ஆகட்டும்" என்று அந்த ஆசீர்வசனங்களை ஏற்றுக் கொண்டாள். மகிணனுடைய மரண சமயம் நெருங்கி வருவதால் நாரதர் வசனத்தை எண்ணி எண்ணி ஏங்கித் துன்ப வாரிதியில் வீழ்ந்து துடித்துக் கொண்டிருந் தாள். பிறகு, தனியிடத்திலிருக்கிற அவளை மாமியார் மாமனார்களிருவரும் அழைத்து, "விரதம் எப்படி உபதேசிக்கப்பட்டதோ அப்படியே அது உன்னால் நிறைவேற்றப் பட்டது; உணவு கொள்ளும் சமயம் வந்துவிட்டது; அம்மா! அடுத்துச் செய்யவேண்டியதைச் செய்" என்று அன்புடன் சொன்னார்கள். சாவித்திரி "சூரியன் அஸ்தமனத்தை அடைந்தபின் விருப்பம் நிறைவேற்றப்பட்ட நான் உணவு கொள்வேன்; இது என் மனத்திலுள்ள எண்ணம். இப்படிச் சபதஞ் செய்திருக் கிறேன்" என்றாள். இவ்வாறு, சாவித்திரி உணவு செய்யும் விஷயத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் பொழுதே சத்தியவான் தோளில் கோடாலியை வைத்துக் கொண்டு காட்டிற்குப் புறப்பட்டான்.


சாவித்திரி கணவனைக்கண்டு, நீர் ஒருவராகச் செல்லலாகாது; நான் உம்மோடு கூட வருவேன்; ஏனெனில் உம்மைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டேன்" என்றாள். சத்தியவான்

"கண்மணி! நீ இதற்கு முன் காட்டில் சென்றதில்லை; வழியுந் துன்பமானது. விரதத்தாலும் உபவாசத்தாலும் இளைத்தவளான நீ எவ்வாறு நடப்பாய்?" என்றான். சாவித்திரி, "நாயக! உபவாசத்தால் எனக்கு வாட்டமுமில்லை; களைப்புமில்லை; காட்டுக்கு வருவதில் விருப்பமுள்ள என்னை நீர் எவ்வகையாலும் தடுத்தலாகாது" என்றாள். சத்தியவான் "பெண்ணே! உனக்கு வருவதில் விருப்பமிருந்தால் உன் விருப்பப்படி செய்வேன்; என்னுடைய பெற்றோரிடம் விடை பெற்றுக்கொள்; இந்த தோஷம் என்னை அணுகாது" என்று சொன்னான்.

பெரிய விரதமுள்ள அந்தச் சாவித்திரி, மாமனாரையும் மாமியாரையும் வணங்கி, இதோ என் கணவன் பழங்களைக் கொண்டுவருவதற்காகப் பெருங்காட்டுக்குச் செல்லுகிறார்; அவரோடு போக எனக்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும்; இப்போது அவரைப் பிரிந்திருத்தல் தகாது; உடன் செல்ல விரும்புகிறேன். மாதா பிதாக்களுக்கு உணவு தேடப் புறப்படுவதால் இவரைத் தடுக்க முடியவில்லை; வேறு காரியமாக வனத்துக்குப் புறப்பட்டால் தடுக்கலாம்; நான் தங்களுக்கு மருகியாக வந்து ஒரு வருடகாலம் ஆகிவிட்டது; நான் இந்த ஆச்சிரமத்தைவிட்டு இதுவரையிலும் வெளியே சென்றதில்லை; மேலும் பூத்திருக்கிற காட்டைக் காண்பதற்கு மிகவும் ஆசையாயிருக்கிறது என்றாள். தியுமத்சேனன் "இந்தச் சாவித்திரியானவள், அவள் பிதாவினால் எனக்கு மருமகளாகக் கொடுக்கப்பட்ட காலம் முதல் இதுவரையில், தனக்கென ஒன்றையும் பிரார்த்தித்ததாக எனக்கு நினைவில்லை, ஆதலால், இவ்வுத்தமி விரும்பியவண்ணம் அடையட்டும், அம்மா! சத்தியவானுடன் செல்லுதி; அவனுடன் சுகமே திரும்பி வருவாய்" என்று வாழ்த்தி விடைகொடுத்தான்.

மாமி மாமன்களிடத்தில் விடைபெற்ற அம்மாதரசி துயரப்படுகின்ற மனத்துடன் சிரிப்பவள்போலப் பதியுடன் சென்றாள். விசாலமான கண்களுள்ள அந்தச் சாவித்திரி எங்கும் அழகாயிருப்பவையும் மயில்கள் நிறைந்துள்ளதுமான காடுகளைக் கண்டாள். சத்தியவான் சாவித்திரியைப் பார்த்து, "பரிசுத்தமாக ஓடுகின்ற நதிகளையும், பூத்திருக்கின்ற சிறந்த மரங்களையும் பார்" என்று இனிய சொல்லைச் சொன்னான். குற்றமற்ற சாவித்திரி ஒவ்வொரு கணமும் கணவனை நன்கு கவனித்துப் பார்த்து வந்தாள். குறித்தகாலம் வந்தவுடன் நாரதர் வசனத்தை நினைத்துக் கணவனை மாண்டவனாகவே எண்ணினாள். அவள் உள்ளத்தை இரண்டு போலச் செய்து கொண்டு, அந்தக் காலத்தின்மீது ஓர் எண்ணமும், கணவனைக் கவனிப்பதில் ஓர் எண்ணமும் உடையவளாக மெல்ல நடந்து சென்றாள்.

மிகு ஆற்றலுடைய சத்தியவான் மனைவியுடன் பழங்களைப் பறித்துக் கூடையை நிரப்பினான்; பிறகு கட்டைகளைப் பிளந்தான். கட்டையைப் பிளக்கின்ற அவனுக்கு



வேர்வையுண்டாயிற்று; அதனால் அவனுடைய தலையில் வலியுண்டாயிற்று; பொறுக்க முடியாத துன்பத்துடன் அந்த உத்தமன் அன்புடைய மனைவியை அணுகி "இந்தக் கட்டையைப் பிளந்ததனால் எனக்குத் தலைவலியுண்டாயிற்று. சாவித்திரியே! அங்கங்கள் சோர்வடைகின்றன; இதயந் துடிக்கிறது; என் நிலைமை தவறுகிறது; என் தலை சூலத்தால் குத்துவது போலிக்கிறது; திசைகளனைத்தும் சுற்றுகின்றன; என்னுடைய மனமானது சக்கரத்தில் ஏறியிருக்கிறது; கல்யாணி! ஆதலால், தூங்குவதற்கு விரும்புகிறேன்; எனக்கு நிற்கச் சக்தியில்லை" என்றான்.

உள்ளம் நடுக்கமுற்ற சாவித்திரி, கணவன் அருகில் வந்து மடியில் அவனுடைய தலையை வைக்கும்படிச் செய்து பூமியில் உட்கார்ந்தாள்.

பிறகு, தவமுள்ள அம்மங்கை நாரதருடைய வசனத்தை ஆலோசிக்கிறவளாக அந்த நாளையும் அந்த முகூர்த்தத்தையும் அந்தக் கணத்தையும் நினைத்தாள்; "ஆ கஷ்டம்! அந்தக்காலம் இதோ வந்து விட்டதே" என்று பெருங்கவலையுற்றுப் பரிதவித்தாள்; சிறிது நேரத்திற்குப்பின் சிவந்த ஆடையை உடுத்தவனும், மகுடந் தரித்தவனும், நல்ல தேகமுள்ளவனும், சூரியனுக்கொப்பான ஒளியுள்ளவனும், கருமை நிறமுள்ளவனும், சிவந்த கண்களையுடையவனும், பாசத்தைக் கையில் வைத்திருப்பவனும், பயத்தை உண்டுபண்ணுகிறவனுமான ஒரு புருஷன் சத்தியவானுடைய பக்கத்தில் அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டாள்.

சாவித்திரிதேவி அவனைக்கண்டு திடுக்கிட்டு உடனே எழுந்திருந்து கணவனுடைய தலையை மெல்ல கீழே வைத்துவிட்டு, கை குவித்து உள்ளம் நடுங்கி, நாக்குழறி, "உம்மைத் தேவரென்று அறிகின்றேன்; இந்தச் சரீரமானது மானிடர்க்குரியதாயில்லை; தேவேசரே! உம்மை அறிய விரும்புகிறேன்; சொல்லும்; நீர் யார்? எதைச் செய்ய விரும்புகிறீர்?" என்று வினவினாள்.

இயமன், "சாவித்திரி நீ பதிவிரதையாயிருக்கிறாய், அப்படியே தவமுடையவளுமாயிருக்கிறாய், அதனால், உன்னோடு பேசுகிறேன் கல்யாணி! நீ என்னை இயமன் என்று அறி; உன்னுடைய கணவனும் இராஜகுமாரனுமான இந்தச் சத்தியவான் ஆயுள் முடிந்தவனாக இருக்கிறான்; நான் அவனைப் பாசத்தால் கட்டிக்கொண்டு போவேன்; இதனை நான் செய்ய விரும்புகிறேனென்று நீ அறிவாயாக" என்றான்.

சாவித்திரி, "பகவானே! மனிதர்களைக் கொண்டு போவதற்கு உம்முடைய தூதர்களன்றோ வருவார்களென்று கேட்டிருக்கிறேன், பிரபுவே! அவ்வாறிருக்க, யாது காரணம் பற்றி நீரே நேரில் வந்திருக்கிறீர்" என்று வினவினாள். அறக்கடவுள் சாவித்திரிக்குப் பிரியத்தைச் செய்யும் பொருட்டு அவளை நோக்கித் தன் எண்ணம் முழுவதும் உள்ளபடி சொல்லத் தொடங்கினான்.

"இவன் தருமத்தோடு கூடினவன்; நல்ல உருவமுள்ளவன்; குணக்கடல்; நல்லொழுக்கமுடையவன்; என்னுடைய தூதர்களால் கொண்டு போகத் தகாதவன்; ஆதலால், நானே நேரில் வந்தேன்" என்று சொன்னான்.

பிறகு கூற்றுவன் சத்தியவானுடைய உடம்பிலிருந்து பாசத்தாற் கட்டப்பட்டவனும், தனக்கு வசப்பட்டவனும், ஒரு கட்டை விரலளவுள்ளவனுமான புருஷனை வலிந்து இழுத்தான்.

உயிர் வாங்கப்பெற்றதும் உயிர்ப்பு நீங்கியதும் ஒளி கெட்டதும் அசைவற்றதுமாகிய அந்த உடல் விரும்பத்தகாத தோற்றமுள்ளதாயிற்று. யமனோ அவனது உயிரைப் பற்றிக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்றான். மகா பதிவிரதையாகிய சாவித்திரி துக்கத்தால் துடிதுடித்துக் கணவனுடைய உடலை மறைத்து வைத்துவிட்டு அறக்கடவுளையே பின்தொடர்ந்து சென்றாள். இயமன், "அம்மா! சாவித்திரி! திரும்பிச்செல்; அவனுக்குச் செய்ய வேண்டிய பிரேத கருமங்களைச் செய்வாயாக; உனக்கும் உன் கணவனுக்கும் ஏற்பட்ட சம்பந்தம் நீங்கியது; நீ வரத்தக்க வரையில் வந்துவிட்டாய்" என்றான்.

**(தொடரும்)**

# கங்காதரர்

**ப**கீரதனின் வேண்டுகோளை ஏற்று தனது சடைக்கற்றையில் கங்கையைத்தாங்கியுள்ள சிவபெருமான் கங்காதரன் என்று அழைக்கப்படுகிறார். இப்பெயரில் பல சிவாலயங்களில் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். இவை கங்காதரேச்சுவரங்கள் என்று போற்றப்படுகின்றன. இவற்றுள் சில இங்கே வழங்கப் பட்டுள்ளன. **காசிநகர் கங்காதரேச்சுவரம்,** காசியில் கங்கையும், பகீதரனும் அமைத்து வழிபட்ட கங்காதீஸ்வரர் ஆலயம் விஸ்வநாதர் கோயிலுக்குள் அரசமரத்தடியில் உள்ளது.



ஆனிமாதம் வளர்பிறை தசமியில் இங்கு சிறப்புடன் வழிபாடு செய்கின்றனர்.

**சென்னை கங்காதரேச்சுவரம்.** சென்னையில் மையப்பகுதியான மத்திய ரயில்நிலையம், மாநகராட்சி அலுவலகம் ஆகியவற்றின் அருகில் புரசைவாக்கம் உள்ளது. இங்கு கங்காதீஸ்வரர் ஆலயம் சிறப்புடன் திகழ்கிறது. தனது வேண்டுகோளை ஏற்று கங்கையை தலையில் தாங்கி அருளியதை போற்றும் வகையில் பகீரதன் முருக்கவனத்தில் சந்தனத்தால் லிங்கம் செய்து வழிபட்டதாகவும் அதுவே இக்கோயிலாக உருவாகி உள்ளதென்றும் கூறுகின்றனர்.

இறைவன் கங்காதரேச்சுவரர், அம்பிகை பங்கஜாட்சி.

இங்கு தீர்த்தம் உள்ளது. பகீரதன் 1008 லிங்கங்களை அமைத்து வழிபட விரும்பினான். இமயம் முதல் குமரிவரை 1007 லிங்கங்களை அமைத்து வழிபட்ட பின் 1008வது லிங்கமாக இந்த கங்காதீஸ்வரரை அமைத்து வழிபட்டார் என்று தலவரலாறு கூறுகிறது. இக்கோயிலில் பகீரதனின் திருவுருவம் உள்ளது. அதற்கு நாள்தோறும் வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

**காஞ்சிநகர் கங்காதரேச்சுரம்** காஞ்சி புரம் ஏகாம்பரநாதர் ஆலயத்திற்குச் சற்று தென்மேற்கில் சர்வதீர்த்தம் என்ற பெயரில் திருக்குளம் உள்ளது. இதனைச்சுற்றிலும் ஏறத்தாழ 16 சிவாலயங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றாக கங்காதீஸ்வரர் ஆலயம் உள்ளது. இதனுள் சிவபெருமான் கங்காதீஸ்வரர் எனும் பெயரில் உள்ளார்.

விநாயகர், முருகர், நந்தி ஆகியோர் பரிவாரங்களாக உள்ளனர். காஞ்சி புராணத்தில் இக்கோயிலின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது. கங்கையுடன் வருணன் இங்கு வந்து வழிபட்டுப் பேருபெற்றான் என்று அதுகூறுகிறது. இக்கோயில் ராஜகோபுரத்துடன் திகழ்கிறது.

**தக்கோலம் கங்காதீஸ்ரவர்** தக்கோலம் என்ற கங்காதீஸ்வரர் திருவூறல் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ளது இங்கு கங்காதீஸ்வரர் ஆலயம் உள்ளது. கண்ணுக்கு புலனாகாத வகையில் உற்பத்தியான ஒரு நீரூற்றை (நந்தியின் வழியாக வெளியேறி) கருவறையைச் சுற்றி ஓடி(மற்றொர் நந்தியின் வாய் வழியாக வெளிப்பட்டு குளத்தில் விழும் வகையில் அமைத்திருக்கின்றனர். இப்போது நீரூற்று வற்றி விட்டதால் நீர் வரத்து இல்லை.

நீர் வழிந்தோடிய அமைப்பு அப்படியே உள்ளது. இது அற்புத அமைப்பாகும்.

**கோவந்தபுத்தூர் கங்காஜடேஸ்வரர்** கொள்ளிடக் கரையில் உள்ள தலம்

கோவந்தபுத்தூர். காமதேனு பசுக்கூட்டத்துடன் வந்து வழிபட்டதால் இப்பெயர் பெற்றது. இறைவர் பெயர் கங்காஜடேஸ்வரர் அம்பிகை மங்களாம்பிகை (ஆராய்ச்சியாளர்கள் தேவாரம் குறிப்பிடும் விஜயமங்கை இதுவே என்று கூறுகின்றனர். நடைமுறையில் திருவைக்காவூருக்கு அருகில் உள்ள விஜயமங்கையை பாடல்பெற்ற தலமாகக் கொண்டுள்ளனர்.) தீர்த்தம் ஜடாகங்கை என்ற கிணறு.

**ஆத்தூர் கங்கா சுந்தரர்** சேலம் மாவட்டம் ஆத்தூரை அடுத்துள்ள விரகனூரில் கங்கா சுந்தரேசுவரர் ஆலயம் உள்ளது.

**சிற்பங்களில் கங்காதரர்**

ஆகமங்களும், புராணங்களும் கூறும் கங்காதரரின் திருவுருவத்தைச் சிற்பிகள் கலையழகு மிக்க சிற்பங்களாக வடித்து மகிழ்ந்துள்ளனர் பல்லவ மன்னர்களுக்கு கங்காதரர் மீது தனி ஈடுபாடு இருந்தது. அவர்கள் அமைத்த அநேக ஆலயங்களில் கங்காதரரை பெரிய சிற்பமாக வைத்துப் போற்றியுள்ளனர்.

திருச்சி மலைக்கோட்டையில் அமைந்துள்ள தாயுமானவர் சுவாமி ஆலயத்திற்கு அருகில் பல்லவர்கால குடைவரைக்கோயில் உள்ளது.

இதில் மிகப்பெரிய புடைப்புச்சிற்பமாக கங்காதரர் அமைக்கப்பட்டுள்ளார். இதில், சிவபெருமான் நான்கு கரங்களுடன் திகழ்கிறார். சுற்றிலும் அறுவர் உள்ளனர். அவர்கள் ஆச்சர்ய முத்திரையில் ஒரு கையை வைத்துக்கொண்டு மற்ற கையை இடுப்பில் ஊன்றி உள்ளனர். இவர்களில் இருவர் கீழே மண்டியிட்டு பெருமானின் இருபுறமும் அமர்ந்துள்ளனர். இருவர் விண்வெளியில் பறந்து கொண்டிருக்கின்றனர். அமர்ந்திருப்பவர்களுக்குப் பின்புறம் மேலும் இருவர் காட்டப்பட்டுள்ளனர். பெருமான் இடது காலை பூமியில் ஊன்றி வலதுகாலை சற்றுமடித்து முயலகன் மீது ஊன்றியுள்ளார்.

பெருமானின் வலதுகால் விரல்களும் முன்பாதமும் அவன் தலைமேல் உள்ளன. அவன் இடதுகையால் அவரது குதிக்காலை தாங்குகிறான். பெருமான் இடது முன்கையை இடையில் ஊன்றி மேல் கையை மேலே நீட்டியுள்ளார். அக்கரத்திற்கு மேலே தலையை தூக்கி வானைப்பார்க்கும் நாய் படுத்துள்ளது. பெருமானின் வலது முன்கரத்தில் பாம்பு உள்ளது. மேல் வலது கரம் சடைக்கற்றை ஒன்றை விரிக்கிறது. அதில் பெண்வடிவில் அவரை வணங்கியவாறு கங்கை வீழ்ந்துகொண்டிருக்கிறாள். இது உலக புகழ்பெற்ற பெரிய சிற்பமாகும். இது அம்பிகை இன்றி அமைந்த வடிவமாகும்.

காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தில் உமையுடன் கூடிய கங்காதரரை காண்கிறோம். இதில் பெருமான் ஆறு கரங்களுடன் திகழ்கிறார். அந்த சிற்பத்தை அடியொற்றி வரையப்பெற்ற கோட்டோவியத்தை எதிரே காணலாம்.

மாமல்லபுரம் குகைக்கோயில்களில் காஞ்சி கைலாசநாதர், மதங்கேசுவரர் முதலிய கட்டுமான கோயில்களில் பல்லவ மன்னர்கள் கங்காதரரைச் சுதைச்சிற்பமாக அமைத்து வழிபட்டுள்ளனர்.

அண்மைக்காலத்திலும் அநேக கோயில்களில் சுதைச்சிற்பமாக கங்காதரரரை அமைத்துள்ளனர். மயிலை கபாலிசுவரர், மயிலாடுதுறை மயூரநாதர் முதலிய ஆலயங்களில் கோபுரங்களில் இத்தகைய சுதைச்சிற்பங்கள் உள்ளன. இவற்றில் மையத்தில் பெருமான் விரித்த சடையுடன் கால்களை அகட்டியபடி நிற்பார். மேலிருகரங்கள் விரிந்து தாழ்ந்துள்ள சடையின் அடியில் சூலத்தை குறுக்குவாட்டில் ஏந்திப் பிடித்தவாறு உள்ளன. முன்கரங்களை இடுப்பில் ஊன்றியுள்ளார். வானத்திலிருந்து சடையில் கங்கை விழுந்து கொண்டிருக்கிறாள். பகீரதனும் இடபத்தின் முதுகின் மீது சாய்ந்துகொண்டிருக்கும் அம்பிகையும் சிவபெருமானின் ஜடையில் கங்கை விழுவதை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

திருவதிகை வீரட்டானேஸ்வரர் ஆலயத்தில் கோபுரத்திற்கு முன்உள்ள 16கால் மண்டபத்தில் மேல் குறித்தவகையில் மிகப்பெரிய அளவிலான கங்காதரர் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.

**-பூசை. ச. அருணவசந்தன்.**

# மங்கலங்கள் அருளும் மகாலட்சுமி

அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்
பெசன்ட்நகர், சென்னை.

பிற தெய்வ வழிபாடுகளைப் போலவே மகாலட்சுமியின் வழிபாடும் மிகத் தொன்மையும், பழைமையும் வாய்ந்ததாகும். இலக்குமியின் திருவுருவ வழிபாடு சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிக காலத்திற்கு முன்பே இருந்து வந்திருக்கிறது எனத் தெரிய வருகிறது. ஹரப்பா இடிபாடுகளில் இலக்குமி உருவம் பொறித்த கற்களும், சிற்பங்களும், சுதை பொம்மைகளும் கிடைத்துள்ளன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சாஞ்சி ஸ்தூபி, உஜ்ஜைனி நாணயங்கள், மதுரா மாநகரத்து மன்னர்களின் நாணயங்கள், குப்த வம்சத்து மன்னர்களின் நாணயங்கள் ஆகியவற்றில் இலக்குமி உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. தமிழகத்தை ஆண்ட மாமன்னன் இராஜராஜன் காசுகளில் உள்ள உருவங்கள் மகாலட்சுமியின் உருவமே என வாதிடுவோரும் உண்டு.

**சங்க இலக்கியங்களில்**


மேற்கண்ட வரலாற்று ஆதாரங்களில் குறிப்பிட்டுள்ளது போல் தமிழகத்தின் சங்க இலக்கியங்களிலும் இலக்குமி குறித்த விபரங்கள் நிறையவே உள்ளன. பதிற்றுப் பத்து, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை போன்ற பழம்பெரும்நூல்களில் திருமகளும் திருமாலும் சுட்டப்படுகின்றனர். வீட்டுப்படிகளில் நிலையின் மேல் திருமகளின் திருவுருவம் தீட்டி வைக்கப்பட்டதாக நெடுநல்வாடை கூறுகின்றது. மதிற்சுவர்களில் திருமகளின் திருவுருவம் செதுக்கியிருந்ததாக மதுரைக் காஞ்சி குறிக்கின்றது.

பின்னர், வந்த ஆழ்வார்கள் திருமகளின் சிறப்புகளையும், வழிபாட்டு முறைகளையும் சிறப்பாகக்கூறியுள்ளனர். திருமாலின் திருவருள் பெறுவதற்கு திருமகளின் திருவருளைப் பெறுவது அவசியம் என ஆழ்வார்களும், ஆச்சாரியார்களும் தெரிவிக்கின்றனர்.

வேதாந்த தேசிகர் திருமாலின் திருவருளைப் பெற பெரிய பிராட்டியாராகிய மகாலட்சுமியின் மூலமே விண்ணப்பிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

திருமாலின் திருமார்பை விட்டு





நீங்காதவளாக திருமகள் உறைகிறாள். அதனாலேயே அவள் 'திருவுரு' எனவும், **'திருமரு'** எனவும் **'ஸ்ரீ வத்சம்'** எனவும் வழங்கப்படுகிறாள்.

சிவனும் திருமகளும் உறையும் கயிலாயத்தில் உள்ள வாயில்களுக்கு ஸ்ரீ துவாரம், லட்சுமி துவாரம், வாருணி துவாரம், கீர்த்தி துவாரம் எனப் பெயர்களாம். சிவன் கோயில்களில் தினம் செய்யும் பூசையின் தொடக்கத்தில் வாயிற்படியின் மேலுள்ள மகாலட்சுமிக்கு செய்யப்படும் துவார பூஜை மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. குடமுழுக்கில் அமைக்கப்படும் யாக சாலையில் நாற்புற வாயில்களின் மீது ஸ்ரீ மகாலக்ஷ்மியை அமைத்துச் சிறப்பான பூசைகள் செய்யப்படுகின்றன.

**பௌத்த சமண மதங்கள்**

பொருள் பற்று இல்லாமை, மிகுபொருள் விரும்பாமை ஆகியவற்றை உறுதிப்பாடாகக் கொண்டுள்ள சமண ஆலயங்களில் கூட வாயிலின் மீது கஜலட்சுமி உருவமும், நிலைக் கால்களில் சங்கநிதி, பத்மநிதி ஆகியவையும் அமைக்கப்படுகின்றன. பௌத்த ஆலயங்களிலும் வாயிலின் மீது திருமகள் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளன.

**இல்லங்களில்**

உப்பிலும், சக்கரையிலும், வீட்டு முற்றத்தில் சாணத்தில் மெழுகுதலிலும், கோலமிடுதலிலும், வாசம் நிறைந்த பூக்களை வீட்டில் வைக்குமிடத்திலும் லட்சுமி தாண்டவமிடுவதாகக் குறிக்கப்படுகிறது.

இதுபோல் தொடக்க காலந்தொட்டு இன்றுவரை வீட்டிலும், நாட்டிலும் சிறப்புப் பெற்ற மகாலட்சுமிக்கு, தனித்ததொரு கோயில் அமைக்கப்பட வேண்டுமெனக் காஞ்சி மகா பெரியவர் தன் உள்ளக்கிடக் கையை வெளியிட்டார். அதன் அடிப்படையில் பொதுமக்கள் பங்களிப்பால் உருவானதே அஷ்டலட்சுமி திருக்கோயில் எனப்படும் இச்சீர்மிகு மகாலட்சுமி திருக்கோயிலாகும்.

மகாலட்சுமி திருக்கோயில் வங்கக் கடலோரம் சென்னை, பெசன்ட் நகரில் உள்ள ஓடைமாநகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

லட்சுமியின் ரூபங்கள் **16**. இந்த **16** ரூபங் களும் சோடச லட்சுமிகள் என அழைக்கப் படுகின்றனர். இந்த **16** உருவங்களும் ஒருமுகப்படுத்தப்பட்டு அஷ்டலட்சுமிகளாக அமைகின்றனர். இவர்கள் அனைவரின் ஏக லட்சுமியாக மகாலட்சுமி விளங்குகிறாள்.

மகாலட்சுமி மகாவிஷ்ணுவுடன் திருமணக் கோலத்தில் காட்சி தரும் வகையில் கருவறை அமைத்து கருவறையின் மேல் அஷ்டாங்க விமானம் என்னும் எட்டுவகை எட்டு அங்கங்கள் கொண்ட (மிகச்சில திருமால் கோயில்களுக்கே உரித்தான) அஷ்டாங்க விமானத்தில் திருமகளின் எட்டு ரூபங்களும் நிறுவப்பட்டு, சென்னையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் செல்வச் செழிப்போடு வளரச் செய்திருப்பதாக இப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

**1. ஆதிலட்சுமி**

ஆதி என்பதற்கு முதல் என்பது பொருள். திருப்பாற்கடலைக் கடைந்த போது வெளிவந்த முதல் இலக்குமி ஆதிலட்சுமி என அழைக்கப்படுகிறாள். இத்திருக்கோயிலின் தரைத்தளத்தில் தெற்குமுகமாக அஷ்ட மங்கலப் பொருட்களுடன் கூடிய பீடத்தில் ஆதிலட்சுமி அமர்ந்து அருள்புரிகிறாள்.

**2. தான்ய லட்சுமி**

தரைத்தளத்தில் மேற்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் ஆறு திருக்கரங்களுடன் தானிய நெற்கதிர் மற்றும் கரும்பு உடையவளாய் கஜபீடத்தில் அமர்ந்து அருள்புரிகிறாள்.

**3. தைரிய லட்சுமி**

மனத்திற்குத் தைரியத்தைத் தருபவள் தைரியலட்சுமி, தைரிய லட்சுமி, மகாலட்சுமி திருக்கோயிலின்தரைத் தளத்தில், வடக்கு நோக்கி வீற்றிருக்கிறாள்.

வடக்கு திசை வெற்றித் திசை என்பதினால் தைரியலட்சுமி சன்னதி வடக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

**4. சந்தான லட்சுமி**

'சந்தானம்' என்பதற்குக் குழந்தை என்று பொருள். குழந்தை வரத்தை அளிப்பதனால் இவளுக்குச் 'சந்தான லட்சுமி' என்று பெயர் வந்தது. மற்றச் செல்வங்களை விடச் சிறந்த செல்வம் குழந்தைச் செல்வம் ஆகும். குழல், யாழ் எல்லாவற்றையும் விட இனியது மழலைச்சொல் எனத் திருவள்ளுவர் குறிக்கிறார். அத்தகைய செல்வத்தை அளிப்பவள் சந்தான லட்சுமி.

இத்திருக்கோயிலின் முதல் தளத்தில் தெற்கு முகமாகச் சந்தான லட்சுமி வீற்றிருக்கிறாள். சடையுடன் கிரீடத்தைத் தரித்தபடி வரத அபயத் திருக்கரங்களுடன் கத்தி, கேடயம் ஆகிய ஆயுதங்கள் அணிந்து காட்சி தருகிறாள். இவளது பீடத்தில் இரு கன்னிப் பெண்கள் சாமரம் வீசியும் விளக்கினைக் கையில் ஏந்திய வண்ணமும் நின்று கொண்டிருக்கின்றனர்.

**5.விஜய லட்சுமி**

'விஜயம்' என்பதற்கு 'வெற்றி' என்று பொருள். வெற்றியை அருள்பவள் விஜயலட்சுமி. எடுத்த காரியங்களை வெற்றி





பெறச் செய்பவள். விஜயலட்சுமிக்கு வெற்றித் திருமகள் என்ற பெயரும் உண்டு.

இத்திருக்கோயிலின் முதல் தளத்தில் மேற்கு முகமாக அன்னப் பறவையின் மீது வீற்றிருக்கிறாள் விஜயலட்சுமி

**6.வித்யா லட்சுமி**

'வித்யை' என்பதற்கு இங்கு 'கல்வி' என்று பொருள். கல்விச் செல்வத்தை வழங்குவதனால் இவளுக்கு வித்ய லட்சுமி என்று பொருள். இத்திருக்கோயிலில் வித்யா லட்சுமியை சரஸ்வதியாக வழிபடுகின்றனர்.

கலைவாணியையும் லட்சுமியையும் இணைத்து நிற்பவளே வித்யா லட்சுமி. இந்தத் திருமகளால் கல்வியும் வளரும்; செல்வமும் வளரும். கலைவாணி நிறைந்த கல்வியையும் ஆற்றலையும் வித்தைத் திறனையும் அளிப்பாள். ஆனால் வித்தைகளைக் கொண்டு வாழ்வியல் நலன்களைப் பெற வைப்பவள் வித்யா லட்சுமியாகும்.

இத்திருக்கோயிலின் முதல் தளத்தில் நம் வல்வினை போக்கி, நம்மை வாழ வைக்க, வடக்கு நோக்கிக் குதிரை வாகனத்துடன் கூடிய தாமரைப் பீடத்தில் வீற்றிருக்கிறாள்.

**7. கஜ லட்சுமி**

'கஜம்' என்றால் யானை என்று பொருள். இருபுறமும் யானைகள் கலசம் ஏந்தித் திருமஞ்சனம் செய்வது போல் அமர்ந்திருப்பதால் கஜலட்சுமி என்ற பெயர் அமைந்தது. கஜலட்சுமியை இராஜலட்சுமி, ஐஸ்வர்ய லட்சுமி எனவும் அழைப்பர்.

கஜலட்சுமியின் உருவத்தை வீடுகளின் வாசற்படியின் நிலைப் படிகளில் காணலாம்.

இத்திருக்கோயிலின் முதல் தளத்தில் கஜலட்சுமி கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறாள். ஒரே கல்லினாலான இரண்டு யானைகள்



இருபுறமும் துதிக்கையில் கலசம் ஏந்திப் போற்ற, தாமரை மலரின் மீது வீற்றிருக்கிறாள்.

**8. தன லட்சுமி**

'தனம்' என்பதற்குச் 'செல்வம்' என்று பொருள். தனலட்சுமி இத்திருக்கோயிலின் இரண்டாவது தளத்தில் கிழக்கு முகம் நோக்கி அமர்ந்திருக்கிறாள்.

**பிற சந்நிதிகள்**

மேற்கண்ட அஷ்டலட்சுமிகளுக்கு மட்டுமல்லாமல் அருள்மிகு கருடாழ்வார் சன்னதி, அருள்மிகு தசாவதாரச் சன்னதி, அருள்மிகு கமல விநாயகர் சன்னதி, அருள்மிகு குருவாயூரப்பன் சன்னதி, அருள்மிகு சக்கரத்தாழ்வார் மற்றும் யோக நரசிம்மர் சன்னதி, அருள்மிகு ஆஞ்சநேயர் சன்னதி, அருள்மிகு தன்வந்திரி சன்னதி ஆகிய சன்னதிகளும் இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அருள்புரியும் வகையில் அமைந்துள்ளன.

**நாள் விழாக்கள்**

இத்திருக்கோயிலைப் பொறுத்தவரை ஒவ்வொரு செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்கள், தமிழ் மற்றும் ஆங்கில மாதப் பிறப்பு தினங்கள் முக்கியமான நாட்களாக கருதி பொதுமக்கள் அதிக அளவில் வருகை தருகின்றனர்.

**திருவிழாக்கள்**

ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதம் திருப்பவித்ரோத்சவம் 5 நாள்களும், கோகுலாஷ்டமி, 9 நாட்கள் நவராத்திரி, விஜய தசமி வெள்ளி புறப்பாடு, தீபாவளித் திருநாள், திருக்கார்த்திகை, மார்கழி மாதம், வைகுண்ட ஏகாதசி, ஜனவரி புத்தாண்டு, போகி, பொங்கல், காணும் பொங்கல், தன்வந்திரி ஜெயந்தி, தமிழ்ப்புத்தாண்டு, ஸ்ரீ சுதர்சன ஜெயந்தி, மாசி மகம், புரட்டாசி சனிக்கிழமைகள், வரலட்சுமி நோன்பு ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படும் திருநாட்களாகும்.

நவராத்திரி திருவிழா மிகச் சிறப்பாக இத்திருக்கோயிலில் கொண்டாடப்படுகிறது. உற்சவர் ஸ்ரீநிவாசரும், தாயார் பத்மாவதியும் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு கோலங்களில் அலங்காரம் செய்யப்பட்டு, உள்பிரகாரத்தில் வலம் வந்து, ஊஞ்சலில் சேவை சாதிப்பார்கள். தினமும் காலை ஸ்ரீ சூக்த ஆராதனம் எனும் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. அந்த ஆராதனையையும், பல்வகை அலங்காரங்களையும் ஊஞ்சல் சேவையில் தரிசனம் செய்ய பெருந்திரளான பக்தர்கள் கூடுவார்கள்.

இத்திருக்கோயில் ஓம்கார க்ஷேத்திரம் எனவும். அஷ்டாங்க விமானத்துடன் வற்றாத வங்கக் கடலே சமுத்திர புஷ்கரணியாகவும், வில்வ விருட்சம் தலமரமாகவும் கொண்டு பாஞ்சராத்திர ஆகம ஜெயாகிய பிரிவின்கீழ் பூஜைகள் அர்ச்சனைகள் திருவிழாக்கள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

அஷ்டாங்க விமானத்தில் இலக்குமியின் தோற்றம் இலக்குமி அருள்புரிந்த வரலாறுகள் இலக்குமியைப் போற்றித் துதித்த மகான்கள் ஆகியோரின் திருவுருவங்கள் கொண்டதாக உள்ளது. இத்திருக்கோயிலில் தினமும் ஆறு கால பூஜை நடைபெறுகின்றது.


| | |
|---|---|
| சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் | ப.ரா. சம்பத் இ.ஆ.ப., ஆணையர்<br>தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை,<br>சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13 |
| ஆசிரியர்(கூ.பொ) | ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர் |
| அச்சிடுவோர் | சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை–86<br>தொலைபேசி: 23450920/28117575 |


குறைந்த செலவில் நீண்ட ஆயுள் உத்திரவாதத்துடன்
கோயில் கலசங்கள், விமானம், கவசங்கள், கொடிமரம்,பிரபை,
பத்தரை மாத்து தங்கத்தில் பளப்பளக்க செய்வோம்
Thejus
24-Ct Gold Platings
94,g n chetty road,t.nagar, chennai 600 017. ph.2815 6370. 94440 00060 email: divyasid@gmail.com www.thejus.com

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11



# அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்

## பெசன்ட் நகர், சென்னை - 90 தொலைபேசி : 2446 6777

## நல் உள்ளம் கொண்டோர்க்கு ஓர் அன்பு வேண்டுகோள்

**இத்திருக்கோயிலில் குடமுழுக்கு நடந்து மீண்டும் குடமுழுக்கு செய்யும் நிலையில், இத்திருக்கோயிலுக்குக் கீழ்க்கண்ட திருப்பணி மற்றும் மராமத்துப் பணிகள் முதன்மைப் பணிகளாகக் கொண்டு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| 1. | அஷ்டாங்க விமானம் 3 தளம் சேர்த்து வெளிப்புறம் சீரமைத்தல் |
| | மற்றும் மராமத்து |
| 2. | காயத்ரி மண்டபம்- திருப்பணி மற்றும் மராமத்துப்பணி |
| 3. | சங்கநிதி விமானம் பழுதுபார்த்தல் |
| 4. | பத்மநிதி விமானம் பழுதுபார்த்தல் |
| 5. | தசாவதார விமானம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் |
| 6. | குருவாயூரப்பன் விமானம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் |
| 7. | சக்கரத்தாழ்வார் விமானம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் |
| 8. | ஆஞ்சநேய விமானம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் |
| 9. | தன்வந்திரி விமானம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் |
| 10. | கருடாழ்வார் சன்னதி விமானம் பழுதுபார்த்தல் |
| 11. | திருமடைப்பள்ளி பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் |

இப்பணிகளை உபயத் திருப்பணிகளாக ஏற்றுச் செய்ய முன்வரும் உபயதாரர்கள் வரவேற்கப்படுகின்றனர். இத்திருப்பணிகளைச் செய்ய விரும்பும் அன்பர்கள் தங்களது ஒப்புதலைத் தெவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. காசோலை (ம) நன்கொடை கொடுக்க விரும்புவோர் நிர்வாக அதிகாரி, அருள்மிகு மகாலட்சுமி திருகோயில், பெசன்ட்நகர், சென்னை - 90 என்ற முகவரிக்கு அனுப்பி உரிய அச்சிட்ட இரசீது பெற்றுக்கொள்ளவும் மகாலட்சுமி, மகாவிஷ்னு அருளுக்கு ஆளாகும்படியும் வேண்டுகிறோம்.

இரா.இரகுநாதன்
செயல் அலுவலர்

சு.இராமு
தக்கார்/ உதவி ஆணையர்